விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 025 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 29 திங்கட்கிழமை (13.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சீனாவுடன் ஏழு ஒப்பந்தங்கள்
## அநுரவால் மேற்கொள்ளப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் சீன விஜயத்தின்போது முதலீடு, மின்துறை, மீன்பிடித்துறை மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. *(15ஆம் பக்கம் பார்க்க)*

## அரிசி இறக்குமதியை இடைநிறுத்தியது அரசு

(கொழும்பு)

அரிசி இறக்குமதி செய்வதற்கு இனி எந்த நடவடிக்கையும் மேற் 15

## பசிலை கைது செய்ய இரகசியப் பொறிமுறை

### அநுர அரசின் ஆட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தற்போது அமெரிக்காவில் உள்ள நிலையில் அவர் தொடர்பான விசாரணைகள் 15

### அத்துமீறிய மீன்பிடி
## தமிழக மீனவர்கள் எண்மர் நேற்று கைது

(மன்னார்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 15

### இந்திய - இலங்கை பாதுகாப்பு
## இராஜதந்திர சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசருக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று கொழும்பில் இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இருநாட்டுப் பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தொடர் 02

# ஜனாதிபதி அநுர குமார நாளை சீனா பயணம்

### கடுப்பாகிறது இந்தியா வரவேற்கத் துடிக்கிறது சீனா



(கொழும்பு)

சீன - இந்திய வல்லரசுப் போட்டியில் இலங்கையும் சிக்குண்டுள்ள நிலையில், புதுடில்லியின் கழுகுப் பார்வைக்கு மத்தியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

*(02ஆம் பக்கம் பார்க்க)*

### சுவாசத் தொகுதியில்
## கச்சான் சிக்கியதில் குழந்தை உயிரிழப்பு

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கச்சான் பருப்பு சுவாசக் குழாயில் 15

## பெண் உரிமை பற்றிப் பேச பிரபாகரனுக்கு மட்டுமே தகுதியுண்டு



கர்வத்துடன் சீமான்

*(03ஆம் பக்கம் பார்க்க)*

## தென்னை மரங்களில் மீண்டும் வெள்ளை ஈ

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள தென்னைகளில் மீண்டும் வெள்ளை ஈ தொற்றுப் பரவத் தொடங்கியுள்ளது.

வெள்ளை ஈக்களின் தொற்றுக் காரணமாக தென்னை ஓலைகளின் 16

## இந்து சமுத்திரத்தின் பெற்றோலிய மையமாக மாறவுள்ள இலங்கை

### ஆரம்ப கட்டப் பணிகளை ஆரம்பித்தது எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையை ஒரு பெற்றோலிய மையமாக நிறுவுவதற்கான ஆரம்பப் பணிகளை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தொடங்கியுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த வாரம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, குவைத் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் தூதர்களுடன் நடத்தப்பட்டதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத் 15

## மார்ச்சில் உள்ளூராட்சி; ஓகஸ்டில் மாகாண சபை



### தேர்தல்கள் இடம்பெற வாய்ப்புண்டு – மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

2025ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் ஓகஸ்ட் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த மாதம் ஐ.நா கூட்டத்தொடர்

# நல்லிணக்கக் குழுவை நியமித்தது அநுர அரசு

*(கொழும்பு)*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு முன்பதாக நல்லிணக்கச் செயன்முறை தொடர்பான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கென விசேட குழுவொன்றை நியமித்து, அதுபற்றி ஜெனீவாவுக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்ற வேளையிலேயே இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அதனையடுத்து இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பிலான தீர்மானம் வாக்கெடுப்பின்றி மேலும் ஒருவருடகாலத்துக்குக் காலநீடிப்புச் செய்யப்பட்டது.

அவ்வாறு ஒருவருடத்துக்குக் காலநீடிப்புச் செய்யப்பட்ட தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடருடன் முடிவுக்கு வருகிறது.

இந்நிலையில் அடுத்தகட்டமாக இத்தீர்மானம் மீண்டும் காலநீடிப்புச் செய்யப்படுமா? அல்லது பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவது குறித்து புதியதொரு பிரேரணை முன்மொழியப்படுமா? இதனை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது? எனும் கேள்விகள் தற்போது எழுந்துள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடருக்கு முன்பதாக, தாம் முன்னெடுக்கவிருக்கும் நல்லிணக்கச் செயன்முறை தொடர்பான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கென அரசாங்கம் விசேட குழுவொன்றை நியமிக்கவிருப்பதாகவும், அக்குழுவினால் தயாரிக்கப்படும் வேலைத்திட்டத்தை உள்ளடக்கியதாக ஜெனீவாவுக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைப்பதற்கு உத்தேசித்திருப்பதாகவும் உள்ளக வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. (ந-7)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முத்துக்குமார சுவாமி திருஊஞ்சல் உற்சவம் நேற்று சிறப்புற இடம்பெற்றது. இதன்போது நல்லையம்பதியுறை முத்துக்குமார சுவாமியார் மகாவல்லி, கஜவல்லி சமேதராய் கையிலை வாகனம்தனில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ந-7)

## ஜனாதி...

ஜனாதிபதி அநுரவின் சீன விஜயமானது தற்போது பேசுபடுபொருளாகியுள்ள நிலையில்இரு நாடுகளும் கருத்து மோதல்களிலும் ஈடுபட்டு வருகின்றன.

ஜனாதிபதி அநுரவின் சீன விஜயத்தைக் கண்டு இந்தியா அஞ்சுவதாக சீன ஊடகங்கள் பகிரங்கமாக விமர்சித்திருந்தன.

மேலும், இந்தியாவிற்கு ஜனாதிபதி அநுர விஜயம் மேற்கொண்டபோது அளிக்கப்பட்ட வரவேற்பினை விட சிவப்புக் கம்பள வரவேற்பு உள்ளிட்ட சிறந்த நடைமுறையைப் பின்பற்றவும் சீன வெளிவிவகார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஜே.வி.பி இந்திய எதிர்ப்புக் கொள்கையை உடையதாக இருப்பதாலும்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இந்திய முதலீடுகளுக்கு எதிராக அநுரகுமார திஸாநாயக்கவின் பிரசாரம் அமைந்திருந்தாலும் ஜனாதிபதி அநுர குமாரவின் சீன விஜயம் குறித்து இந்தியா மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.


இதேவேளை இலங்கை சீனாவுடன்நெருக்கமானஉறவை ஏற்படுத்தாமல் இருக்கும் வகையில், இந்தியா தனது இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்துள்ளது.

இதன் ஓர் ஏற்பாடாக இந்தியப் பிரதமர் நரேந்ததிர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருப்பதுடன், இந்தியக் குடியரசுத் தினத்தில் பங்கேற்குமாறு இலங்கை அமைச்சர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு மற்றும் பிரதமர் ஹரிணி உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருடன் இந்தியா நடத்திய இராஜதந்திரக் கலந்துரையாடல்கள் என்பன அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தியாவும் சீனாவும் இலங்கை மீது ஆதிக்கம் செலுத்துவதில் தீவிரமாக இருப்பது, ஜனாதிபதி அநுரவிற்கு தலையிடியாகவே இருக்கும் என்ற கருத்து அரசியல் வட்டாரங்களில் பேசுபடுபொருளாகியுள்ளது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1938 - 04 - 12 | 2025 - 01 - 12 |

### சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம்

*சாவகச்வேரி வடக்கு, மருதடியைப் பிறப்பிடமாகவும் தாழையடி துறவு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம் நேற்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் (காலஞ்சென்ற மகேஸ்வரியின் கணவரும்) செல்வநாயகி (குஞ்சுமணி) அவர்களின் அன்புக் கணவரும் மஞ்சுளா (மாலா), சுமித்ரா (கீதா), பிறேமினி, யமேலா (வேணி), வக்சலா (வதனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விநாயகமூர்த்தி, துரைராஜா, குபேரகாந்தன், சுரேந்திரன், காலஞ்சென்ற விஜயராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருக்ஷன், அட்ஷயா, துபீஸ்னா, துபீகா, மதுசானன், ஜதுலன், மகிஷா, டினிஷா, சங்கீர்த், அனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் பாக்கியம், சுந்தரலிங்கம், தவமணி, காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், பரிமளம், பவளம், சந்திரவதனா, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2025) திங்கட்கிழமை 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

*தகவல்:*

(C-2033)

## மார்ச்சி...

மாதத்தில் பின்னர் மாகாண சபைத் தேர்தலும் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பாணந்துறைப் பகுதியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக முன்னர் கோரப்பட்டிருந்த வேட்பு மனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களைக் கோருவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கும் வகையிலான சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள் ளது.

குறித்த சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குப் போதியளவு கால அவகாசம் உள்ளது.

எனவே, அதனை நிறைவேற்றி மூன்று மாதங்களுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தக்கூடிய சட்டரீதியான இயலுமைகள் கிடைக்கப் பெறும்.

அதற்கமைய, மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும் என்றார். (ந-7)


லங்கா மஹறால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(3018)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719
WESTERN UNION WU moving money for better · MoneyGram. · Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் உரிமை பற்றிப் பேச பிரபாகரனுக்கு மட்டுமே தகுதி உள்ளது

## செந்தமிழன் சீமான் கர்வம்



(சென்னை)

**பெண் உரிமை பற்றி பேச தலைவர் பிரபாகரனுக்கு மட்டுமே தகுதி உள்ளது என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்தார்.**

பெரியார் குறித்து சீமான் பேசிய கருத்துகள் தமிழ் நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சீமானின் கருத்திற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் நாட்டில் பெரியாருக்கு மிகப் பெரிய ஆதரவு இருக்கிறது. பெரியாரை ஆதரித்து பேசும் இத்தனை தலைவர்களில் யாராவது ஒருவர் பெரியாரின் சித்தாந்தங்கள் தத்துவங்களை பேசி வாக்கு சேகரிக்க தயாராக இருக்கிறீங்களா?

ஆனால் தடைசெய்யப்பட்ட இயக்கம், பயங்கரவாதி என்று சொல்லும் என் தலைவனின் பெயரை சொல்லி வாக்கு சேகரிக்க தயாராக இருக்கிறேன்.

பெரியார் குறித்து பேச, பொது விவாதத்திற்கு நான் இருகரம் நீட்டி தயாராக உள்ளேன்.

கலைஞர் காலத்தில் அவரது வீட்டிலேயே இரண்டு அமைச்சர்கள். இப்போதும் அது தொடர்கிறது இது தான் சமூக நீதியா? என அவர் கேள்வி எழுப்பினார். (நி)


# கால்பந்தாட்ட நட்சத்திரம் ரொனால்டோ இலங்கையில்

(கொழும்பு)

பிரேசில் நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற கால்பந்தாட்ட நட்சத்திரம் ரொனால்டோ நஷாரியோ இலங்கைக்கு சுற்றுலா பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ரொனால்டோவின் இலங்கை வருகையின் போது சிறிலங்கன் விமான சேவையில் அவர் பயணம் செய்த புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகிக் கொண்டிருக்கின்றன

இந்தநிலையில், இலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களில் ரொனால்டோ நஷாரியோ பொழுது போக்கும் புகைப்படங்கள் தற்போது உலகளவில் பேசுபொருளாகத் தொடங்கியுள்ளன. (நி)



# உச்ச நீதிமன்ற நீதியரசர்கள்

## ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

நான்கு புதிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஆர்.எம்.எஸ்.ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி.அபேகோன் மற்றும் எம்.எஸ். கே.பி. விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் புதிய உச்ச நீதிமன்ற நீதியரசர்களாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டார். (நி)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 10 - 01 - 1951 |  | 10 - 01 - 2025 |

## அருளானந்தம் வசந்தாதேவி

வேலணையைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டி ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் வசந்தாதேவி அவர்கள் 10.01.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலகுபிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதிகளின் மருமகளும் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் தவமணிதேவி(கந்தசாமி), அருட்செல்வம்(ராஜேஸ்வரி), பஞ்சலிங்கம்(சரோஜினிதேவி), காந்திமலர்(சண்முகநாதன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜீவதர்சன், போஜினி, மயூரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குணாளினி, சசீதரன், அபிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜினி, ஜுசிசன், ராகல்வியா, ஆதித்தியன், அதிரன், யாழமுதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.01.2025 இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-2007)

# 80 ஆயிரம் வேட்பு மனுக்கள் இரத்து தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேட்பு மனுக்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன. அதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டின் மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கடந்த அரசாங்கத்தினால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் முன்னைய வேட்பு மனுக்களை இரத்துச் செய்தும், புதிதாக வேட்பு மனுக்களைக் கோரும் வகையிலும் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் நாடெங்கிலும் உள்ள 320 உள்ளூராட்சி மன்றங்களின் 8711 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக, எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள்ளாக தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் ஒருகட்டமாக கடந்த ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட 80 ஆயிரத்து 670 வேட்பு மனுக்கள் தற்போது இரத்துச் செய்யப்படவுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025

## புதிய வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும்



செவ்வாயை இராசிநாதனாகக் கொண்ட விருச்சிக இராசி அன்பர்களே!

இந்த ஆண்டு உங்களின் கிரக நிலைகளை வைத்து பார்க்கும் போது நீங்கள் பொறுமையுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த விடயங்கள் அனைத்தும் முழுமையாகக் கைகூடும். உங்களைப் பகடைக்காயாக பயன்படுத்தி வந்த உற்றார், உறவினர்களின் உள்மனதைப் புரிந்து கொண்டு அவர்களிடமிருந்து விலகி விடும் சந்தர்ப்பங்கள் உண்டாகும்.

உங்கள் அருகிலேயே இருந்து சதி செய்தவர்கள் ஓடி ஒளிவார்கள். அரசாங்கத்தில் உங்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும். காத்திருந்தவர்களுக்கு புதிய வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும். நெடுநாட்களாக இழுபறியாக நடந்துவந்த வழக்குகள் சட்டென்று சாதகமாக முடியும்.

**குடும்பம்:** குடும்பத்தில் சின்ன சின்ன மனஸ்தாபங்கள் ஏற்படலாம். ஆனாலும் உங்கள் சாமர்த்தியமான செயல்களால் அனைத்தையும் சமாளிப்பீர்கள். இல்லத்தில் களவு போன பொருட்கள் திரும்பவும் கை வந்து சேரும். இயல்பான காரியங்களைக்கூட மாற்று வழிகளில் சிந்தித்து செயற்படுத்துவீர்கள். உங்களின் தோற்றத்தில் பொலிவும், நடையில் மிடுக்கும் உண்டாகும்.

உங்கள் சகோதர, சகோதரிகள் தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டுவார்கள். புதிய மந்திரங்கள் கற்பீர்கள். குடும்பத்தில் நல்ல பெயர் வாங்குவீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். உங்களின் தெய்வ பலத்தால் சோர்வடையாமல் பணியாற்றுவீர்கள். மற்றபடி எவருக்கும் உங்கள் பெயரில் பணம் வாங்கித்தர வேண்டாம். மேலும் அவசியமான பயணங்களையே மேற்கொள்ளவும். புதிய நண்பர்களை ஓரளவுக்கு மேல் நம்ப வேண்டாம். பொதுக்காரியங்களில் ஈடுபட மனம் விழையும். சமுதாயத்தில் உயர்ந்தவர்களுடன் இணக்கமாகப் பழகுவீர்கள். சிலருக்கு ரியல்எஸ்டேட் துறைகளின் மூலம் ஆதாயங்கள் கிடைக்கும்.

**ஆரோக்கியம்:** உங்களை வாட்டிய உடல் உபாதைகளும் நீங்கி விடும். மனதில் இருந்த இறுக்கமான சூழ் நிலை மாறும்.

**பொருளாதாரம்:** எதிர்பார்த்த பொருளாதார முன்னேற்றத்தைக் காண்பீர்கள். ஆனாலும் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படலாம்.

**உத்தியோகத்தர்கள்:** உத்யோகத்தர்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாக இருப்பதால் அவர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். சக ஊழியர்களிடம் உங்கள் மனதில் உள்ளவற்றைக் கூற வேண்டாம். நீங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்கிற நிலையில் இருப்பதே சிறப்பு. மற்றபடி அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்கள் திறமையில் குறைவு ஏற்படாது.

**வியாபாரிகள்:** வியாபாரிகளின் முயற்சிகளுக்கு ஏற்ற இலாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும். தடை ஏற்பட்டாலும் அனைத்துச் செயல்களும் வெற்றி பெறும். வாடிக்கையாளர்களைக் கவர புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். பெரிய முதலீடுகளில் தொழிலை விரிவுபடுத்த நினைக்க வேண்டாம். இருப்பதை நேர்த்தியாகச் செய்து முடிப்பதே சிறப்பு. புதிய கடன்கள் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவும்.

**பெண்கள்:** பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை சுமாராகவே இருக்கும். ஆனாலும் கணவர் வழி உறவினர்கள் பாசத்தோடு பழகுவார்கள். உற்றார், உறவினர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். சிலருக்கு வயிறு சம்பந்தமான உபத்திரவங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் உணவு விடயங்களில் கவனத்துடன் இருக்கவும். தெய்வ வழிபாட்டைக் கூட்டிக் கொண்டு ஆன்ம பலம் பெறவும். பணிபுரியும் பெண்கள் நிர்வாகத்திடமிருந்து தேவையான சலுகைகளைப் பெறுவார்கள். சேமிப்பு செய்து பணத்தை குடும்பத்தின் சுப செலவுகளுக்காக பயன்படுத்துவார்கள்.

குடும்ப நிர்வாகத்தில் உள்ள பெண்கள் தங்கள் உறவினர்கள் மூலம் நன்மை அடைவார்கள். உறவினர்களின் பாசப்பிணைப்பு குடும்பமேன்மைக்கு உதவிக்காரமான இருக்கும்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகளுக்கு கட்சியில் முக்கியப் பொறுப்புகள் கிடைக்கும். தொண்டர்களின் ஆதரவுடன் பதவிகளைத் தக்க வைத்துக்கொள்வீர்கள். மற்றபடி முக்கியப் பிரச்சினைகளில் வாயைக் கொடுத்து மாட்டிக்கொள்ள வேண்டாம். புதிய முயற்சிகளையும் தவிர்க்கவும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் அனுகூல செயற்பாட்டை தேவையான நேரத்தில் தடையின்றி பெறுவார்கள். பிறருக்காக நடத்தி தர வேண்டிய பணிகள் இந்த வருடம் நடக்கும். ஆன்மிக எண்ணங்கள் மனதில் ஊற்றெடுப்பதால் தெய்வ காரியங்களை விருப்பத்துடன் செய்வீர்கள். அடுத்தவர் செலவில் நீங்கள் உங்கள் தேவைகள் எதையும் பூர்த்தி செய்யமாட்டீர்கள். மேலிடம் எல்லா வகையிலும் உங்களுக்கு துணை நிற்பார்கள். எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விடுவார்கள்.

**கலைத்துறையினர்:** கலைத் துறையினர் உழைப்புக்கேற்ற பலனை அடைவீர்கள். "உழைப்பே உயர்வு" என்கிற ரீதியில் பணியாற்றுவீர்கள். ஒப்பந்தங்களைச் சரியான நேரத்தில் முடித்துக் கொடுத்தாலும் பணவரவுக்கு தாமதம் ஏற்படலாம். ஆனாலும் ரசிகர்களின் உற்சாகமான ஆதரவு உங்கள் மனவருத்தத்தைக் குறைக்கும் மருந்தாக அமையும்.

வரவேற்புகள் குறைந்தாலும் நிலைமை போகப்போக மாறிவிடும். சினிமா, நாடகம், சின்னத்திரை ஆகியவற்றில் நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடிகர், நடிகையர்கள் தனக்குள்ள திறமையை நன்கு வளர்த்துக் கொள்வார்கள். புதிய வாய்ப்புகளையும் நிறைந்த பொருளாதாரத்தையும் பெற்று மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துவார்கள்.




**மாணவர்கள்:** மாணவர்கள் உழைப்புக்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் சாதனை புரிவார்கள். பெற்றோரின் ஆதரவு உங்களுக்கு நன்றாகவே அமையும். உள்ளரங்கு விளையாட்டுகளில் வெற்றி பெறுவீர்கள். நடனம், இசை பயிற்சி பெறும் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பயின்று தேர்ச்சி பெறுவார்கள். சிவில், ஓவியம் சம்பந்தமான பயிற்சி மாணவர்கள் புதிய யுக்திகளை அறிந்து நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.

மோட்டார் வாகனம், படகுகள், விமானம் ஓட்டுவதற்கான பயிற்சி பெறும் மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள். கல்விச் செலவுக்கு தேவையான பொருளாதார தேவைகள் எளிதாகக் கிடைக்கும்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த ஆண்டு வாழ்வு வளம் பெறும். துணிச்சலாக காரியங்களில் ஈடுபடுவீர்கள். நியாயமாகவும், நேர்மையாகவும் எல்லாக் காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் இலாபம் கிடைக்கச் செய்யும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும் படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோதைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.

**அனுஷம்:** இந்த ஆண்டு குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும்படி தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். விருப்பங்கள் கைகூடும். அக்கம்பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். மனம் மகிழும் படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிக நாட்டம் ஏற்படும். ஆன்மிக ஸ்தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்புக் கிடைக்கும். எதிர் பார்த்த நன்மைகள் நடக்கும். வேலை நிமித்தமாக வெளிநாட்டிற்கு பயணம் செல்ல வேண்டி வரலாம். உங்கள் திறமைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கேட்டை:** இந்த ஆண்டு பூமி சம்பந்தமான துறையினருக்கு இலாபம் உண்டாகும். விற்பனை அதிகரிக்கும். மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள். ஆனால் அதன் முழுப் பலன்களையும் அனுபவிக்க இயலாத அளவிற்கு மற்றவர்களால் சிறு குறுக்கீடுகளும் தோன்றும். மனம் தளராமல் எதிரிகளைச் சமாளிப்பீர்கள். கடினமான வேலைகளையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். புதிய பொறுப்புகளையும் பெறுவீர்கள். பயணங்களால் நன்மைகள் உண்டாகும். கவனமாக பேசுவது அவசியம். உங்களின் எதார்த்தமான வார்த்தைகள் பூதாகரமான பிரச்சினைகளை உண்டாக்கலாம்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று 9 முறை வலம் வரவும்

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், செவ்வாய் ;

**அதிஷ்ட எண்கள்:** 2, 9

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.போதனாவின்
# என்புமுறிவு விடுதிகள் புதிய கட்டடத்தொகுதிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை என்புமுறிவு விடுதிகள் (Ward 14 மற்றும் 17) புதிய கட்டடத்தொகுதிக்கு இடமாற்றப் பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் முன்னதாக மருத்துவ கட்டடத்தொகுதியில் (நுழைவாயில் 6 முன்புறம்) செயற்பட்டு வந்த என்புமுறிவு சத்திரசிகிச்சை விடுதிகள், தற்போது நவீன வசதிகளுடன் விபத்து மற்றும் அவசர சிகிச்சை கட்டடத்தொகுதியின் 3 ஆம் மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

புதிய விடுதிகளில் நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளதால், அவர்கள் மிகவும் இலகுவாக சிகிச்சை பெற முடியும்.

மற்றும் என்புமுறிவு நோயாளிகளை பார்வையிட வருவோர், வைத்தியசாலையின் நுழைவாயில் இலக்கம் 2A என குறிப்பிடப்பட்டுள்ள வழியாக வைத்தியசாலைக்குள் நுழையமுடியும், விபத்து மற்றும் அவசர சிகிச்சை கட்டடத் தொகுதியின் வலதுபுறத்தில் அமைந்துள்ள மின்தூக்கி மூலம் மேலே சென்று, குறித்த விடுதிகளில் உள்ள நோயாளியை பார்வையிடலாம்.

ஒரு நோயாளியை பார்வையிட, பார்வையிடும் நேரங்களில் ஒரேநேரத்தில் இருவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த அறிவுறுத்தலுக்கு இணங்க நோயாளிகளை பார்வையிட வேண்டுமென யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.(நி-33)

## 52 கமநல சேவை நிலையங்களில்
# 15 ஆண்டுகளுக்கு மேலாக
## பயன்பாடற்ற நிலையில் உழவு இயந்திரங்கள்

(கண்டாவளை)


வடக்கு மாகாணத்தில் உள்ள 52 கமநல சேவை நிலையங்களில் இந்திய அரசின் நன்கொடையின் கீழ் வழங்கப்பட்ட 500 வரையான உழவுஇயந்திரங்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக எந்த வித பயன்பாடுகளும் இன்றி காணப்படுகின்றன. இவ் உழவு இயந்திரங்களை விவசாயிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு விவசாய சேவை மையங்களில் இந்திய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட 500 வரையான உழவு இயந்திரங்கள் உள்ளன.

விவசாயிகள் இலவசமாக அல்லது தவணை அடிப்படையில் குறித்த உழவு இயந்திரங்களை கோரினர், ஆனால் அரசாங்கம் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முறையாகப் பயன்படுத்தப்படாமலும் பராமரிக்கப்படாமலும் குறித்த உழவு இயந்திரங்களின் மதிப்பு ஆண்டுதோறும் குறைந்து வருவதுடன் உழவு இயந்திரங்களுக்குரிய விவசாய மையங்களுக்கு எந்த ஓட்டுநர்களும் நியமிக்கப்படவில்லை.

அத்துடன் மாகாண சபையால் உழவு இயந்திரங்களின் உரிமை விவசாய சேவை மையங்களுக்கு மாற்றப்படவில்லை. கொள்முதல் வழிகாட்டுதல்களின்படி விவசாய சேவை மையங்களால் நடத்தப்பட்ட ஏலம் உரிமை முறையாக மாற்றப்படவில்லை. விவசாய சேவைக் குழுக்கள் மற்றும் விவசாய அமைப்புகள் விவசாயிகளுக்கு நன்கொடை அளிக்கவோ அல்லது விற்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறு பாராமுகமாக விடுவதற்கான காரணம் என்ன? எனவும் விவசாயிகள் கேள்வியெழுப்பியுள்ளனர். (8-315)



## மறவன்புலோவில்
# நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன்புலோ கமக்கார அமைப்பினரின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நெல் அறுவடை மற்றும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி மற்றும் வட மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி சுகந்தினி ஆகியோரும், கௌரவ விருந்தினராக கைதடி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜும் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் விசுவமடு பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை அவரை வீதியில் வழிமறித்து, சோதனையிட்ட போது, அவரது உடைமையில் இருந்து ஒரு கிலோ 345 கிராம் கேரளக்கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.அதனை அடுத்து குறித்த நபரை கைது செய்த பொலிஸார் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்தனர்.

சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33)

# இராசிபலன்

13.01.2025
மார்கழி 29, திங்கட்கிழமை
பூரணை பின்னிரவு 4.51 மணிவரை
திருவாதிரை முற்பகல்11.23மணிவரை

சுபநேரம் -12.33-2.03 மணிவரை
இராகுகாலம் -8.03-9.33 மணிவரை
உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்

சந்திராஷ்டமம்.
அனுசம், கேட்டை.

வளவன்

**மேஷம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் சந்திப்பால் சுப விரயங்கள் கூடும் நாள், வழிபாடு இன்பம் தரும்.

**துலாம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைகள் விலகிதன வரவுகள் வந்து கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**ரிஷபம்** நிதி நிலை உயரும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிம்மம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வரவும் சமமாகும் நாள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், பிரயாண பயமுண்டு.

**கும்பம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்,உறவினர்கள் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** குடும்ப செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதிகூடும் நாள்.

**கன்னி** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர். கனவு பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தூரதேச செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

அகம்பாவத்தைவிட பணிவானது அதிக ஆதாயத்தைப் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகம் அறக்கொடை நிறுவனத்தால் பொங்கல் பொருட்கள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

தாயகம் அறக்கொடை நிறுவனத்தால் கடந்த 5 ஆம் திகதி வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் 150 குடும்பங்களுக்கு பொங்கல் பானைகளும் பொங்கல் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சங்கத்தினரின் குடும்பங்களைச் சேர்ந்த 180 மாணவர்களுக்கு சீருடையுடன் காலணிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (நி)

## திருமறைக் கலாமன்றத்தின் பொங்கல் விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா காலை, மாலை நிகழ்வுகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொங்கல் தினமாகிய நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலை ஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம் பெறும்.

வழமையாக பொங்கல் தினத்தன்று மாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள் அன்றைய தினத்தில் இடம்பெறாது.

அதற்குப் பதிலாக எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நாகதாளிப்பழம்

**Botanical name- Cactus indicus**
**Family- Cactaceae**

இதனை சப்பாத்துக் கள்ளிப் பழம் எனவும் குறிப்பிடுவர். எமது யாழ்ப்பாண பிரதேசத்திற்குரிய பழமாகும். இதன் காய்கள் பச்சை நிறத்தில் இருக்கும். இவை பழுத்தால் சிவப்பு நிறத்தை அடையும்.


இப் பழங்களின் மேல் ஆங்காங்கே சிறிய முட்கள் இருக்கும். இப் பழங்களை கிராமத்து மக்கள் விரும்பிச் சாப்பிடுவர். பழத்தைக் கவனமாக பிடுங்கி அதன் முட்கள் உள்ள பகுதியை கல்லில் தேய்த்து முட்களை அகற்றி பழத்தின் தோலை எடுத்து உள்ளே இருக்கும் சதைப்பகுதியை சாப்பிட வேண்டும்.

அதனுள் நட்சத்திர வடிவ விதை இருக்கும். அதை நீக்கி விட வேண்டும். பழத்தின் சதைப்பகுதி இரத்த சிவப்பாகவும் நல்ல இனிப்புச் சுவையுடனும் இருக்கும். புற்று நோய் வராமல் தடுக்கக் கூடிய கள்ளி இலை பழங்களில் முக்கியமானது.

கண்பார்வையை கூர்மை அடையச் செய்யும். ஞாபக மறதியை போக்கும். கெட்ட கொழுப்பை நீக்கும். சிறுநீரகத்தை சுத்தமாக்கும். உடலில் அதிகரித்த வெப்பத்தை அகற்றக்கூடிய சிறந்த பழங்களாகும்.

குழந்தை பேறின்மையானவர்கள் இப்பழங்களை சாப்பிட்டு வர சிறந்த பலனைக் கொடுக்கும். கர்ப்பப்பையை பலப்படுத்தும். பித்தப்பையில் ஏற்படும் கற்களை கரைக்கக்கூடியது. நாகதாளிப் பழத்தில் கல்சியம், பொட்டாசியம், பொஸ்பரஸ், மக்னீசியம் போன்ற சத்துக்களும் உயர்தரமான நார்ச்சத்தும் நிறைந்துள்ளது.

இதில் உயிர்ச்சத்து C



அதிகமாக உள்ளது. இப் பழத்தில் இருக்கும் மிகையான பொட்டாசியம் சத்தானது இதயத்துடிப்பை சீரடையச் செய்யும். உயர் இரத்த அழுத்தத்தை சீராக்கும். வாரத்தில் 3 நாட்கள் இப்பழங்களை சாப்பிட்டு வர கர்ப்பப்பையில் இருக்கும் நீர்க்கட்டிகள் தானாக அழிந்து விடும்.

இப்பழங்களை சாப்பிட்டு வர செரிமான பிரச்சினை சீராகும். மலக்குடல் சார்ந்த பிரச்சினைகளையும் சீராக்கும். மலம் இலகுவாக கழியும். இதில் இருக்கும் உயர்தர நார்ச்சத்தால் உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்புக்களை கரைத்து உடல் பருமனைக் குறைக்கின்றது. நீரிழிவு நோயையும் கட்டுப்படுத்தக்கூடியது.

கடுமையான வறட்சியை தாங்கி வளரக்கூடியது. இப்பழங்கள் கிடைப்பது நாகதாளிச் செடியிலாகும். இப் பழங்களை நம் முன்னோர்கள் சாப்பிட்டு நீண்ட நாட்கள் ஆரோக்கியமாகவும் வாழ்ந்துள்ளார்கள். இப்பழங்களை யூஸாக தயாரித்து சிறுவர்களுக்கு கொடுக்கலாம். சீனி சேர்க்கத் தேவையில்லை.

சீனி இல்லாமலே அவ்வளவு தித்திப்பாக இருக்கும் நாகதாளிப் பழங்களாகும். நாகதாளிப்பழத்தில் இருக்கும் கல்சியம், பொஸ்பரஸ், மக்னீசியம் சத்துக்கள் என்புகளை பலப்படுத்தக்கூடியது.

ஆண்மலட்டுத் தன்மையில் விந்து உயிரணுக்கள் ஆரோக்கியமாக இல்லாத ஆண்களுக்கு இப்பழங்களை சாப்பிட்டு வர சிறந்த பலனைக்கொடுக்கும். உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடியது.

மேலும் சப்பாத்துக் கள்ளிப்பழத்தில் உயிர்ச்சத்தும் ஒமேகா 6 கொழுப்பு அமிலங்கள், தாவர ஊட்டல் சத்துக்கள், பீட்டா கரோட்டின் என ஏகப்பட்ட சத்துக்கள் உள்ளன. இது ஓர் சத்துக்கள் நிறைந்த அதிக மருத்துவக் குணங்களினைக் கொண்ட மலிவான, தரமான எமது பிரதேசத்திற்குரிய பழங்களாகும்.

இப்பழங்களை சாப்பிட்டு வர புத்துணர்ச்சியையும் உடலிற்கு குளிர்ச்சியையும் கொடுக்கக்கூடியது. மிகக் குறைந்த கலோரிகளைக் கொண்டதால் உடல் எடையை குறைக்க நினைப்பவர்களும் இப் பழங்களை சாப்பிடலாம். அத்துடன் பெருங்குடலை சுற்றியுள்ள நச்சுக்களும் வெளியேறுகிறது. பெண்களுக்கு இந்தச் சப்பாத்துக் கள்ளி அருமருந்து என்றே சொல்லலாம். காரணம் மாதவிடாய் நேரத்தில் ஏற்படும் அடிவயிற்று வலியைத் தடுக்கின்றது.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பெண்கள் இப்பழங்களைச் சாப்பிட்டு வர கருமுட்டை வளர்ச்சியை சீராக்கக்கூடியதாக இருக்கும். சாதாரண மக்கள் இப் பழங்களை நாவறட்சியை போக்கவும் சாப்பிடுவார்கள்.

இதைவிட நாகதாளிப் பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து E, A போன்ற சத்துக்கள் முடிவளர்ச்சி, தோலைப் பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடியது. (Guardian for skin health) இப்பழங்களில் காணப்படும் நீர்ச்சத்தும் தோல் வறட்சியை போக்கக்கூடியது. இப்பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து C ஆனது கொலாஜின் உற்பத்திக்கு உதவுகிறது. இது சருமத்தை பராமரிக்க உதவுகிறது. வெப்பத்தால் தோல் பாதிப்படைவதையும் தடுக்கும் (Protection against sun damage) எனவே இப்பழங்களை நாம் தாராளமாக பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்-சஜித் கூட்டிணைவு விரைவில் சாதக சமிக்ஞை

## ராஜித நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் கூட்டிணைந்து செயற்படுவதற்காக சாதகமான சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளனர் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக்கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மீண்டும் இணைந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன.

விசேடமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் இணைய வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் மீண்டும் தாய்க் கட்சிக்கு வருவதற்கு தயாராக உள்ளனர். எனினும் அவர்கள் தங்களின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக சிந்திக்கின்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைகின்ற போது தேர்தல் வெற்றிகள் உள்ளிட்டவை சாதகமாக அமையும் என்பதை நடைபெற்று முடிந்த கூட்டுறவுத்துறைக்கான தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலைமையில் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்கள் மீண்டும் இரு தரப்பும் இணைந்து கொள்ள வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளனர். அதன் ஒரு வெளிப்பாடாகவே கடுவல தொகுதியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் மீள் இணைவு காணப்படுகின்றது.

எனவே கட்சியின் அங்கத்தவர்களின் நிலைப்பாடுகளை கட்சிகளின் தலைவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் கூட்டிணைவது குறித்து பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆகவே, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னதாக சாதகமான முன்னேற்றங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கை வெகுவாக உள்ளது. அதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்தார். (நி)

# வாகனங்களின் விலை 50 சதவீதம் வரை அதிகரிக்கலாம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை எதிர் காலத்தில் 50 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதி யாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்சிகே சுட்டிக்காட்டியுள்ளார். ஐந்து ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டிருந்த வாகன இறக்கு மதியை மீண்டும் ஆரம்பித்ததன் பின்னர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இறக் குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக் கான வரி வீதம் விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட் டுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகை யில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. அதன்படி, உற்பத்தி செய்யப் பட்ட நாளிலிருந்து 10 ஆண்டு களுக்கு மேற்படாத வாகனங்களுக்கு 200 சதவீதம் மற்றும் 300 சதவீதம் வரிகள் அதிக ரிக்கப்பட்டுள் ளன.

சில வகையான வாகனங் களுக்கு அவற்றின் இயந்திரத் திறனை அடிப்படையாகக் கொண்டு வரிகள் நிர்ணயிக் கப்பட்டுள்ளன. இந்த வரி வீதங்க ளின்படி, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகளும் வற் வரி நீங்க லாக, 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கக் கூடும் என இலங்கை வாகன இறக்குமதி யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா : 26
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L, Police Officer
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/15066

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Company Work(Canada)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/15069

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம் : சித்திரை
1 இல் செவ்
கி.பா: 56 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, Driver(own)
எதிர்பார்ப்பு: வெளிநாடு, தகுதியான பெண்
தொ.இ: B/15070

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 36 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS, Doctor.
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, படித்த தகுதியான பெண்.
தொ.இ: G/15007

பிறப்பு : 1999 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
1 இல் செவ்
கி.பா: 24
உயரம்: 5'4"
தகைமை/தொழில் : A/L, தையல்.
எதிர்பார்ப்பு : வெளிநாடு
தொ.இ: G/15010

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 37
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Degree , Teacher, (Australia).
எதிர்பார்ப்பு - Degree and Employee
தொ.இ: G/15003

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

# மணிவிழா வாழ்த்து

ஆசிரியர் திருமதி:

## ரூபவதி சிவநாயகம்

(SLTS-I.B.A. (HON),Dip.in.Edu).



சேவைக்காலம் (1993.06.16–2025.01.13)
புத்தளம் இந்துக் கல்லூரி
வ/பிரமண்டு வித்தியாலயம்
வ/விநாயகர் வித்தியாலயம்
யா/நீர்வேலி C.C.T.M.S
யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

மாணவர்களின் கல்விக் கண்திறந்திட அயராது உழைத்த ஆசிரியரின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.

(2998)

வாழ்த்துவோர்:– பாடசாலைச்சமூகம்,யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர்மாற்றம்

### 88/4, சங்கரத்தை வீதி, வட்டாரம் –02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, சங்கரத்தை வீதியிலுள்ள இல 88/4 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் பொன்னுத்துரை என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **இளையவன் நடேசன்** ஆகியவர் குறித்த ஆதனம் **பொன்னுத்துரை** என்பவரினால் அவரின் பெறாமகனாகிய சின்னத்துரை தனேந்திரன் என்பவருக்கு 1940ஆம் ஆண்டு காலப்பகுதியில் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டிருந்ததெனவும், குறித்த தனேந்திரன் தனது ஆதனத்திற்கு பக்கத்தில் குடியிருந்து வந்த இளையவன் நடேசன் ஆகிய தனக்கு குறித்த ஆதனத்தினை வாய்மொழி மூல நன்கொடை ஆதனமாக வழங்கியதாகவும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த ஆதனத்தினையும், ஆதனத்திற்கான உறுதியினையும் தன்னிடம் ஒப்படைத்து தற்போது குறித்த உறுதியினை நிறைவேற்றித்தர முடியாத சூழ்நிலையால் தான் மீண்டும் சொந்த நாட்டிற்கு வரும்போது உறுதியை நிறைவேற்றித் தருவதாகக் கூறி குறித்த தனேந்திரன் வெளிநாடு சென்றுவிட்டதாகவும், நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு சூழ்நிலைகளின் போது குறித்த உறுதியினை தான் தொலைத்துவிட்டதாகவும், குறித்த உறுதி நிறைவேற்றிய நொத்தாரிசின் பெயர் விபரங்களை தான் மறந்துவிட்டதாகவும், குறித்த உறுதிகளின் பிரதிகளை காணிப்பதிவு அலுவலகத்தில் தேடிக்கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும் குறித்த ஆதனத்தினை இன்றுவரை எதுவிதமான தங்குதடை, சட்டப்பிரச்சினைகளுமின்றி தான் ஆண்டனுபவித்து வருகின்றதாகவும் எனவே ஆட்சியுரிமைச் சட்டப்படியும் இவ்வாதனத்தின் முழு உரிமையாளர் தானே எனவும் பிரகடனப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் 4514/18.02.2020ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த **இளையவன் நடேசன்** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான **மாணிக்கம் பார்த்தீபன் பெண் அன்பரசியும், புண்ணிய மூர்த்தி கோபிறாஜ் பெண் ரேவதியும்** ஆகியவர்களுக்கு பிதா வழி முதுசமாக வந்தடைந்தது.

குறித்த **புண்ணியமூர்த்தி கோபிறாஜ் பெண் ரேவதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 19675/21.12.2023ம் இலக்க உறுதியால் குறித்த மாணிக்கம் பார்த்தீபனும் பெண் அன்பரசியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **புண்ணியமூர்த்தி கோபிறாஜ் பெண் ரேவதி** ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **புண்ணியமூர்த்தி கோபிறாஜ் பெண் ரேவதி** ஆகியவருக்குப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(2990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலி வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றும் தமிழக ஆட்சியாளர்கள்

### எக்ஸ் தளத்தில் பதிவிட்ட விஜய்



(சென்னை)

நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 2026 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தீவிரமாக தயாராகி வருகின்றது.

இந்நிலையில் அக் கட்சித் தலைவர் விஜய் அவரது எக்ஸ் தளத்தில் தேர்தலுக்கு முன்பு போலியான வாக்குறுதிகளை மக்களுக்கு கொடுத்து தேர்தலின் பின் மீண்டும் மக்களை ஏமாற்ற வேண்டும் என்பது தான் தற்போது தமிழக ஆட்சியாளர்களின் எண்ணம்.

அதற்கு நீட் தேர்வு விவகாரம் ஒரு சான்று. 2021 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வை கண்டிப்பாக ரத்து செய்வோம் என்று ஆட்சியாளர்கள் மக்களை நம்ப வைத்தனர்.

ஆனால் தற்போது நீட் தேர்வை ரத்து செய்யும் அதிகாரம் அரசுக்குத்தான் உள்ளது மாநில அரசால் அதனை ரத்து செய்ய முடியாது என்று தெரிவித்திருப்பது மக்களை ஏமாற்றும் செயல் அல்லவா?

பல பொய்களைச் சொல்லி தமிழக மக்களை ஏமாற்றலாம் என்ற எண்ணம் இனி வரும் காலங்களில் ஈடேறப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.(நி)

# லாஸ் ஏஞ்சல்சில் தெ...

# நிலைமை மோசமாகு...

**(லாஸ் ஏஞ்சல்ஸ்) அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ்... இன்னும் மோசமாகலாம் என ... அதிகாரிகள், மக்களை வீடுகளு... அறிவுறுத்தி உள்ளனர்.**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சில நாட்களுக்கு முன் காட்டுத் தீ ஏற்பட்டது. மழையில்லாமல் வறண்டு புதர் மண்டிய நிலப்பரப்பு மற்றும் மலைப் பகுதியில் இருந்து கடலை நோக்கி வீசும் கடுமையான காற்று ஆகியவை தீப்பிடிக்க காரணமாக கூறப்படுகிறது.

பாலிசேட்ஸ், ஈட்டன், அல்டாடெனா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. நான்கு லட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். 10 ஆயிரம் வணிக கட்டடங்கள், 30 ஆயிரம் வீடுகள் தீயில் எரிந்து நாசமாகி உள்ளன.

இதுவரை 13 லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் ஹொலிவுட் நகரமான லாஸ் ஏஞ்சல்சில் நடிகர், நடிகையர் வீடுகளும் தீயில் எரிந்துள்ளன.

இதே போல் காட்டுத் தீயில் சிக்கி பலியானவர்





களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்து உள்ளது.

இந்நிலையில் ஈட்டன் மற்றும் பாலிசேட்ஸ் பகுதியில் ஏற்பட்ட தீ இன்னும் சில பகுதிகளுக்கு பரவக்கூடும் என வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

பால... காட்... எரி... மட்...

### ரஷ்யாவை சீண்டும் ஜப்பான்

## 29 நிறுவனங்களுக்கு தடை விதிப்பு



(ஜப்பான்)

29 ரஷ்ய நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதிப்பதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

அதில் தொழில்நுட்பம் மற்றும் இயந்திர உற்பத்தி உள்ளிட்ட ரஷ்ய இராணுவம் சார்ந்த 22 தொழிற்சாலைகளுக்கு ஏற்றுமதி தடை விதிக்கப்பட்டு உள்ளது.

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா 2023 ஆம் ஆண்டு போர் தொடுத்தது.

இதில் அமெரிக்கா, பல ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவது, பொருளாதார உதவிகளை அந்த நாடுகள் வழங்குகின்றன. அதேபோல் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்படுகிறது.

உக்ரைனுக்கு தனது ஆதரவை காட்டும் வகையில் ரஷ்யாவைச் சேர்ந்த 11 தனிநபர்கள், 29 நிறுவனங்கள் மற்றும் 3 வங்கிகள் மீது ஜப்பான் பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

மேலும் தொழில்நுட்பம் மற்றும் இயந்திர உற்பத்தி உள்ளிட்ட ரஷ்ய இராணுவம் சார்ந்த 22 தொழிற்சாலைகளுக்கு ஏற்றுமதி தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இதனை தொடர்ந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி தடை உள்ள 335 பொருட்களின் பட்டியலுக்கும் ஜப்பான் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (நி)

## விசித்திர வடகொ...

## விநோத சட்...

(பியாங்யாங்)

உங்கள் வீடு தீப் பிடித்தால், முதலில் கிம் ஜாங் உன்னின் புகைப் படத்தை நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்ற விநோத சட்டம் வடகொரியாவில் உள்ளது.

வடகொரியா விசித்திரங்கள் நிறைந்த நாடு. இங்கு ஜனாதிபதியாக கிம் ஜாங் உன் உள்ளார். குடும்ப சர்வாதிகாரம் மற்றும் குடிமக்கள் பின்பற்ற வேண்டிய அசாதாரண விதிகளுக்கு பெயர் பெற்றது. அங்குள்ள விநோத கட்டுப் பாடுகள் குறித்து @the millionairemagnets இன்ஸ்டாகிராம் வீடியோ வைரலாக பரவி வருகிறது.

அந்த வீடியோவில் வடகொரிய பெண் ஒருவர் பதற்றமாகப் பேசுவதைக் காட்டுகிறது. வர்ணனையாளர் வட கொரியாவிலிருந்து தப்பியோடிய ஒரு பெண்ணுடன் உரையாடுகிறார்.



அதில் வடகொரியாவில் குடியிருக்கும் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் புகைப்படம் இருக்க வேண்டும் என்றும், அதை எப்போதும் கறைபடாமல் வைத்தி...

ருக்... பெல... க்க... இரு... நுவ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...தொடரும் காட்டுத்தீ ...கும் என எச்சரிக்கை!

...ஞ்சல்ஸ் நகரில் தொடரும் காட்டுத்தீ ... என எச்சரித்துள்ள வனத்துறை ...வீடுகளுக்குள் தங்கியிருக்கும்படி



...யில் ...குதிக ...வனத் ...னர்.

பாலிசேட்ஸ் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயில் 22,600 ஏக்கர் பகுதி எரிந்த நிலையில், 11 சதவீதம் மட்டுமே அணைக்கப்பட்டு உள்ளது.

ஈட்டன் மற்றும் அல்டெண்டா பகுதிகளில் ஏற்பட்ட காட்டுத் தீயால் 14 ஆயிரம் ஏக்கர் நிலம் எரிந்தது. 15 சதவீதம் பகுதிகளில் மட்டுமே தீ அணைக்கப்பட்டு உள்ளது.

வரும் காலங்களில் பலத்த காற்றானது மணிக்கு 120 கி.மீ., வேகத்தில் வீசக்கூடும் என வானிலை மையம் எச்சரித்து உள்ளது. இதனால் வரும் நாட்களில் நிலைமை இன்னும் மோசமாக அமையும் என அதிகாரிகள் எச்சரித்து உள்ளனர்.

இந்தக் காட்டுத் தீ காரணமாக, லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. பொழுதுபோக்கு, விளையாட்டு மற்றும் சமுதாய நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டு உள்ளன.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத் தீ காரணமாக கடும்புகைமூட்டமாக பல பகுதிகளில் காணப்படுகிறது. இதனால், மக்கள் வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும் என எச்சரித்து உள்ளனர். (நி)

# மீண்டும் வெனிசுலாவின் ஜனாதிபதியானார் நிக்கோலஸ்



(கராகஸ்)

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் கடந்த 2019 முதல் நிகோலஸ் மதுரோ ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார்.

கடந்த ஜூலையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டார். எதிர்க்கட்சி கூட்டணி சார்பில் எட்மண்டோ கோன்சலஸ் களம் இறங்கினார். இருவருக்கும் இடையே கடுமையான போட்டி இருந்த சூழலில், 53.67 சதவீத ஓட்டுகள் பெற்று மதுரோ வென்றார்.

ஆளுங்கட்சி விசுவாசிகளின் ஆதிக்கம் நிறைந்த அந்நாட்டு தேசிய தேர்தல் சபை, ஓட்டுப்பதிவு முடிந்த சில மணி நேரங்களுக்கு பின், மதுரோவை வெற்றியாளராக அறிவித்தது. இது எதிர்க்கட்சியினருக்கு சந்தேகத்தை எழுப்பியது. தேர்தல் சபை முடிவை அவர்கள் ஏற்கவில்லை. நாட்டின் பல பகுதிகளில் போராட்டங்கள் வெடித்தன.

ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தேர்தல் முடிவை ஏற்க மறுத்தன. இந்த சூழலில், திட்டமிட்டபடி மூன்றாவது முறையாக வெனிசுலா நாட்டின் ஜனாதிபதியாக நிகோலஸ் மதுரோ நேற்று முன்தினம் பதவியேற்றார்.

இதற்கிடையே வெனிசுலாவின் ஜனநாயகத்தை அழித்ததாக மதுரோ உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்டோர் மீது பொருளாதார தடை விதித்துள்ள அமெரிக்கா, மதுரோவை பிடித்து தருவோருக்கு சன்மானம் வழங்குவதாக அறிவித்துள்ளது. (நி)

# ...வடகொரியாவில் ...சட்டங்கள்



... குடி ...ங்கள் ... கிம் ...ருக்க ... எப் ...வத்தி

ருக்க வேண்டும் என்றும் அந்தப் பெண் விளக்குகிறார்.

தூசி இருக்கிறதா என்று சோதிக்க ஆய்வாளர்கள் பெரும்பாலும் இரவு முழுவதும் வீடுகளுக்குள் நுழைகிறார்கள்


புகைப்படத்தில் ஏதேனும் தூசி காணப்பட்டால் அது விசுவாசமின்மையின் அடையாளமாகக் கருதப்படும். மேலும் அந்த வீட்டில் உள்ளவர்களை கைது செய்யலாம்.

தண்டனை மரண தண்டனையாகவோ அல் லது குடும்பத்தின் மூன்று தலைமுறையினருக்கு சிறைத் தண்டனையாகவோ இருக்கலாம்.

ஒரு வீடு தீப்பிடித்தால், கிம் ஜாங்-உன்னின் படத்தைக் காப்பாற்றுவது ஒருவரின் சொந்த உயிரைக் காப்பாற்றுவதை விட முன்னுரிமை பெறுகிறது.

விரைவாக வைரலான இந்தப் பேட்டி, வட கொரியர்கள் எதிர்கொள்ளும் கற்பனை செய்ய முடியாத கஷ்டங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியது, மேலும் சமூக ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது. (நி)

# ஜோ பைடனின் இத்தாலிப்பயணம் ரத்து



(வோஷிங்டன்)

போப் பிரான்சிஸ் மற்றும் இத்தாலிய ஜனாதிபதி செர்ஜியோ மேட்டரெல்லா, பிரதமர் ஜியார்ஜியா மெலோனி ஆகியோரை சந்திப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஜனவரி 9 ஆம் திகதி முதல் ரோம் நகருக்குச் செல்கிறார் என்றும், போப் பிரான்சிசை சந்திக்க உள்ளார் எனவும் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருந்தது.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள டொனால்ட் ட்ரம்பிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு முன் ஜோ பைடன் செல்லும் கடைசி வெளிநாட்டுப் பயணமாக இது இருக்கலாம் என கூறப்பட்டது.


இந்நிலையில், ஜோ பைடனின் இத்தாலி பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

கலிபோர்னியாவில் பற்றி எரிந்து வரும் காட்டுத்தீயை போராடி அணைக்கும் முயற்சியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் ஜனாதிபதியின் இத்தாலி பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வெற்றியைக் கொண்டு வரும் “NLB ஜய”




**விளம்பர விபரணம்**

6 தசாப்த காலத்துக்கும் அதிகமாக ஏராளமானவர்களின் வாழ்க்கையை உயர்த்தி நாடு முழுவதும் வெற்றியாளர்களை உருவாக்கி, நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியாகப் பங்களிப்பை வழங்கும் முன்னணி அரச நிறுவனமாகத் தேசிய லொத்தர் சபையினை அறிமுகப்படுத்தலாம்.

இந்த சமூகப் பணிக்கு மேலதிகமாக நாளாந்தம் இருபது இலட்ச வெற்றியாளர்கள், பத்து இலட்ச வெற்றியாளர்கள் மற்றும் இலட்சாதிபதிகள் போல் கோடீஸ்வர வெற்றியாளர்களை நாட்டுக்கு உருவாக்கும் தேசிய லொத்தர் சபையானது கையிலே காசுக்காக, ஆகக் குறைந்த அதிஷ்டப் பந்துகளைப் பாவித்து அதிகளவான வெற்றி வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் “NLB ஜய” லொத்தரை புதிய வருடப் பிறப்பிலே வாடிக்கையாளர் உங்கள் கைகளிலே வழங்கியுள்ளது. இந் நிகழ்வானது சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் திரு.நளிந்த ஜயதிஸ்ஸ, தேசிய லொத்தர் சபையின் தலைவர் திரு.எம்.டீ.சீ.ஏ. பெரேரா, பொது முகாமையாளர் திரு.ஏ.எம்.ஆரிஃப் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

நாளாந்தம் ரூ.500,000/-, ரூ.50,000/-, ரூ.2,000/-, ரூ.200/- மற்றும் ரூ.40/- வெற்றியாளர்களை உருவாக்கும் நோக்கிலே சந்தைக்கு விநியோகிக்கப்படும் “NLB ஜய” லொத்தரின் முதலாவது சீட்டிழுப்பானது விசேட சீட்டிழுப்பாக 2025 ஜனவரி 31 சீட்டிழுக்கப்படவுள்ளது.

இந்த விசேட சீட்டிழுப்பிலே வழமையான பரிசுகளை விட மேலதிகமாக கவர்ச்சியான KUV மோட்டார் வண்டி ஒன்று, மில்லியன் பரிசு வெற்றியாளர்கள் மற்றும் இலட்சாதிபதிகளை உருவாக்குவதற்கு தேசிய லொத்தர் சபையானது தயாராகவுள்ளது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 280 | 150 | 170-200 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 800 | 1000 | 900-1000 |
| தக்காளி | 400 | 350 | 400 | 360 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 240 | 220 | 250 |
| கோவா | 180 | 150 | 250 | 270 |
| கரட் | 250 | 250 | 300 | 300 |
| பூசணி | 140 | 120 | 150 | 100-120 |
| புடோல் | 200 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 100-130 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 380 | 200-450 |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 350 | 200 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 500-550 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 200 | 150 |
| பயற்றங்காய் | 850 | 600 | 400 | 750-800 |
| லீக்ஸ் | 280 | 380 | 300 | 360 |
| பீற்றூட் | 650 | 500 | 500 | 380 |
| கறிமிளகாய் | 850 | 650 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 1600 | -- |
| போஞ்சி | 400 | 300 | 400 | 300-350 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 150 | 50-80 |
| தேசிக்காய் | 400 | 300 | 200 | 250-270 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 230 | 150 | 100-200 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 600 | 600 | -- |
| முள்ளங்கி | 200 | 120 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 180 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 90 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 90 |

# இன்று ஒரு தகவல் 297



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## களிப்பு! மகிழ்வு! ஆனந்தம்!

“எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு சார்!” என்று சொல்லிக்கொண்டு என்னிடம் வந்தார் ஒருவர். என்னிடம் வந்து கொஞ்ச நேரம் பேசியதற்கு பின்பு அவர் அப்படி சொல்லியிருந்தால் அதிலே ஒரு அர்த்தம் இருந்திருக்கும்.

வருவதற்கு முன்னாலே வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது என்கிறார். என்ன சார் விடயம்? என்று விசாரித்தேன்.

எங்கள் விட்டிலே தினமும் மூன்று வேளையும் ஒரே மாதிரிச் சாப்பாடு சார். வித்தியாசமே கிடையாது. இப்படியே மூன்று மாதமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அதைவிடப் பட்டினி கிடந்து செத்துடலாம் என்று தோன்றுகிறது என்றார்.

ஒரு பெரியவர் (ரஜினீஷ்) சொன்ன தத்துவத்தைச் சொல்வதற்கு ஆள் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்ப ஒருத்தர் கிடைத்து விட்டார். விடுவேனா? சொல்ல ஆரம்பித்தேன்!

நாம் அனுபவிக்கிற உணர்வுகள் களிப்பு, மகிழ்வு, ஆனந்தம். இவை மூன்றுக்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் உண்டு. மேம்போக்கா பார்ப்பதற்கு இது மூன்றும் ஒன்று மாதிரித் தோன்றும். ஆனால் அது அப்படி இல்லை! களிப்பு என்பது உடம்பைப் பொறுத்தது. மகிழ்வு என்பது மனதைப் பொறுத்தது. ஆனந்தம் என்பது. ஆன்மாவைப் பொறுத்தது. இப்படி இந்த மூன்று வகையான சுவைப்புகளின் தன்மையும் வேறு வேறு.

முதலில் “களிப்பு என்பதை எடுத்துக் கொள்வோம். நமது புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய பொருள்களுக்கு சில விசேட குணம் உண்டு. அது எப்படி என்றால். சீக்கிரமே சலிப்பை உண்டு பண்ணும் ஒருத்தர் அந்தப் பொருளை எடுத்துக்கொண்டால் அது இன்னொருத்தருக்குக் குறைஞ்சிடும். உணவு, உடை இதெல்லாம் களிப்பைத் தரக்கூடிய பொருள்கள்!

இப்ப உதாரணத்துக்கு, ஒரு சாப்பாட்டு மேசையிலே ஒரு பாத்திரத்திலே பத்து இட்லி இருக்கு... அதிலே ஒரு இரண்டு இட்லியை நமது தட்டுலே எடுத்து வைத்து சாப்பிடுகின்றோம். நாம் சாப்பிட்ட அந்த இட்லி நிச்சயமாக எதில் உட்கார்ந்திருக்கிறவருக்கு இல்லை! நாம் சாப்பிட்ட அதே இட்லியை அவரும் சாப்பிட முடியாது. அவர் வேறுதான் எடுத்து சாப்பிடணும்.

அதுமாதிரி நாம் ஒரு சட்டையை எடுத்துப் போட்டால் அது இன்னொருத்தருக்கு இல்லை என்று ஆகிவிடும். ஒரே சட்டையை ஒரே நேரத்திலே இரண்டு பேரும் போட முடியாது.

புலன்களுக்கு களிப்பைத் தரக்கூடிய இதுமாதிரி பொருட்கள் எல்லாம் முதல் தடவை நமக்குக் கொடுக்கற களிப்பை இரண்டாவது தடவையும் கொடுக்காது. மூன்றாவது தடவை இன்னும் குறையும். கடைசியிலே வெறுப்பாவே மாறிவிடும்.

ஒவ்வொன்றாக இட்லியை தொடர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். முதல் இட்லி தரக்கூடிய சுவையை முப்பதாவது இட்லி தருமா? முதல் தடவை புது சட்டையை போட்டுக்கொள்ளும் எங்களு க்கு இருக்கிற களிப்பு அதையே நூறாவது தடவையாக போடுமத் போது இருக்குமா?

இதுதான் “களிப்பு” அதாவது சீக்கிரமே சலிப்பை தரக்கூடியது. ஒருவர் எடுத்துக் கொண்டால் இன்னொருத்தருக்குக் குறைந்து போகக்கூடியது.

ஆனால் “மகிழ்வு” என்பது அப்படி இல்லை! ஒருவர் அனுபவிப்பதாலே இன்னொருத்தருக்கு குறைந்து போகாது

காலையிலே சூரியன் உதயமாவதைப் பார்த்து சந்தோஷப்படுகிறீர்கள். அதையே இன்னொருத்தரும் பார்த்து சந்தோஷப்படலாம்.

ஒரு நல்ல சங்கீதத்தை கேட்கின்றீர்கள். ஒரு அழகான ஓவியத்தை ரசிக்கிறீர்கள். நீங்க ரசிக்கிற அதே நேரத்துலே இன்னொருத்தரும் அதை ரசிக்கலாம். அதனாலே அது குறைந்து போகப் போவதில்லே. இது “மகிழ்வு”. ஆனால் ஒன்று. ஒரே பாடலைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தால் கடைசியிலே அலுப்பு தட்டும்! அதாவது “மகிழ்வு” என்பது எப்படி என்றால் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதனாலே குறையாது. ஆனால் ஒரே பொருள் மீண்டும் மீண்டும் அனுபவிப்பைத் தரும்போது... முதலிலே மகிழ்வு அதிகரித்து அதன்பின்பு அது மங்கி மறைந்து போய்விடும்.

சரி மூன்றாவதாக சுகம் தரக்கூடிய “ஆனந்தம்” என்பது எப்படி? என்றால் இது நமக்கு உள்ளேயிருந்து சுரக்கறது. மனசு சஞ்சலங்களிலிருந்து விடுபடும்போது இந்த ஆனந்தம் நமக்குக் கிடைக்கும். இது நிலையான சுகம். ஆத்ம சுகம் களிபபிலிருந்து மகிழ்வுக்கும் மகிழ்வில் இருந்து ஆனந்தத்துக்கும் செல்வதுதான் மனிதன் நடத்த வேண்டிய முக்கியமான பயணம்.

இவ்வளவு விடயத்தையும் கேட்டுவிட்டு இந்தக் காலத்துப் பையன் ஒருத்தன் என்னிடம் சொல்கின்றான் “இப்ப நீங்க ஒரு சாப்பாட்டு மேசையிலே ஒரு பத்து இட்லியை வையுங்கள் என்னை உட்கார வையுங்களள் எதிரிலே இன்னொருத்தரை உட்கார வையுங்கள் நான் களிப்பு மகிழ்வு எல்லாம் தாண்டி நேரடியாக ஆனந்தத்துக்குப் பயணம் பண்ணிக் காட்டுகிறேன்!” என்றான்.

அது எப்படி? என்ன செய்வாய் என்று கேட்டேன் ஆச்சரியமாக. இரண்டு இட்லி சாப்பிட்டால் தானே களிப்பு. நான் பத்து இட்லியையும் மொத்தமாகச் சாப்பிட்டு விடுவேன். அடுத்தவனுக்கு எதுவும் கிடைக்காது. அவனுக்கு கிடைக்காது நாங்கள் சாப்பட்டு விட்டோமே. அதுதான் நமக்கு ஆனந்தம் என்கிறான் சார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லை

## பிரதி விவசாயப் பணிப்பாளர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லை என பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி மாலினி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

உளுந்து அறுவடை தொடர்பில் நேற்றுக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,2024-2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பெரும் போகத்தில் 5650 ஹெக்டேயர் அளவில் வவுனியா மாவட் டத்தில் உளுந்து செய்கை மேற்கொள்ளப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது உளுந்து அறுவடையை மேற்கொள்கிறார்கள்.

அவர்களுக்குத் தற்போது உரிய விலை கிடைக்கவில்லை என்பது குறையாகவுள்ளது. உண்மையில் அறுவடைக் காலத்தில் விற்பனைக்குக் கொண்டு செல்லும் போது விலை குறைவாகத் தான் இருக்கும். உளுந்தை வண்டு மற்றும் பூச்சித் தாக்கம் இல்லாது பாதுகாக்க வேண்டும்.

விலை அதிகரிக்கும் காலங்களில் அதனை விற்பனை செய்ய வேண்டும். 300 கேச் தடிப்புள்ள பொலித்தீனில் பொதி செய்து வைத்திருக்க முடியும். அல்லது 5 லீற்றர் குடிநீர் வரும் போத்தலில் கூட உளுந்தைப் போட்டு பாதுகாப்பாக மூடி வைக்க முடியும்.

அரசாங்கம் உளுந்திற்கான விலை தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-250)

புதுக்குடியிருப்பில்

# சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு மாற்றுவலுவுடையோர் செயலணியின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் மு.ப 10 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் கலந்து சிறப்பித்ததுடன் மாற்றுவலுவுடையோரைக் கௌரவித்து பரிசில்களும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் வட மாகாண சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளர். செல்வி. அகல்யா செகராஜா, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ந.தசரதராஜகுமாரன், ஏனைய அதிகாரிகள், சமூக மட்ட அமைப்பினர், மாற்று வலுவுடையோர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8)



கிளிநொச்சி வட்டக்கச்சி ஐயப்பன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.(படம்:-யதுபாஸ்கரன்)

## பொங்கல் தினத்தை முன்னிட்டு...



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பரந்தன், குமாரபுரம், உமையாள்புரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 150 குடும்பங்களுக்கு கிரிவலம் அறக்கட்டளையினரால் பொங்கல் பொருட்கள் கடந்த 9 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டன.(8-316)

• • • • • • • • • • • • • • •

(வவுனியா)

வவுனியா லயன்ஸ் கழகத்தினால் 25 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.(8-250)

• • • • • • • • • • • • • • •

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு ,செய்யப்பட்ட விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கு உலருணவுப் பொருட்களும் பொங்கல் பொருட்களும் கடந்த 10 ஆம் திகதி புலம்பெயர் தேசத்தில் வாழும் ஒருவரால் "புறுட்ஸ் கபி" நிறுவனத்தின் ஊடாக குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. (8-100-316)

# சுவாமி விவேகானந்தரின் 162 ஆவது பிறந்த தினம்

## வவுனியாவில் அனுஷ்டிப்பு



(வவுனியா)

சுவாமி விவேகானந்தரின் 162ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுக்காலை வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றதுடன் அவரது சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் சுவாமி விவேகானந்தர் தொடர்பான நினைவுரைகளை தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்கள் வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் ப.சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், நகரசபை செயலாளர் அ.பாலகிருபன், உள்ளூராட்சிமன்ற முன்னாள் உறுப்பினர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (8-250)

# மன்னார் சிறுவர் பூங்கா மீள் புனரமைப்பு ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் நகரப் பகுதியில் உள்ள சிறுவர் பூங்காவை மீள் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை மன்னார் நகரசபை செயலாளரின் வழிகாட்டலுக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலங்களாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட நிலையில் நகரசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறித்த பூங்காவானது புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

குறிப்பாக சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் உள்ளடங்கலாக,நீர்,மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு செயற்பாடுகளை செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் முதல் கட்டமாக 15 இலட்சம் ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு சிறுவர் பூங்காவானது இம்மாத இறுதியில் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# உழவர் பெருவிழா

(முல்லைத்தீவு)

வற்றாப்பளைக் கண்ணகி மாட்டுவண்டிச் சவாரிச் சங்கம் நடத்தும் மாபெரும் தைப் பொங்கல் தின உழவர் பெருவிழா நாளை செவ்வாய்க் கிழமையும் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமையும் நண்பகல் 12 மணிக்கு வற்றாப்பளை சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

கண்ணகி மாட்டுவண்டிச் சங்க போஷகர் திருச்செல்வம் இரவீந்திரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வற்றாப்பளை உழவுத் தொழிலின் தலைமகன் க.சுந்தரலிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். (8)

# கால்நடைகளின் உறைவிடமாக காணப்படும் ஆயுர்வேத வைத்தியசாலை




(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பல மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடம் இன்று வரை திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகத்தின் கீழ் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையினை தருமபுரம் பகுதியில் இயங்க வைப்பதற்காக கரைச்சி பிரதேச சபையினால் தருமபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த ஆயுர்வேத வைத்தியசாலை கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று பல ஆண்டுகள் ஆகிய போதும் இன்று வரை திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

குறித்த ஆயுர் வேத வைத்தியசாலைக் கட்டடம் தற்போது கால்நடைகளின் உறைவிடமாகவும் காணப்படுவதாகப் பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 678





ரவிதாஸன் முதலியோர் திகைத்து நின்றார்கள்.

இவரால் எனக்கு இன்னும் பல காரியம் ஆக வேண்டியிருக்கிறது. தெரிகிறதா? நான் இதோ புறப்படுகிறேன் நீங்களும் புறப்படுங்கள். இவர் அவருக்கு விருப்பமான வழியில் போகட்டும். யாரும் இவரைத் தடை செய்ய வேண்டாம்!" என்றாள் நந்தினி.

ரவிதாஸன், தேவி! ஒரு விண்ணப்பம்! தங்கள் சித்தப்படி செய்யக் காத்திருக்கிறோம். ஆனால் இவனிடம் குதிரை இருக்கிறது. இவனை முதலில் போக விடுவது நல்லதா? கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள்!" என்றான்.

நல்லது. இவரை அந்தப் பள்ளிப்படைக் கோவில் தூணுடன் சேர்த்துக் கட்டி விடுங்கள். கட்டை அவிழ்த்துக் கொண்டு புறப்பட இவருக்குச் சிறிது நேரம் ஆகும். அதற்குள் இந்தப் பள்ளிப் படைக் காட்டை நீங்கள் தாண்டிப் போய் விடலாம் என்றாள்.

வந்தியத்தேவன் பள்ளிப் படைத் தூணுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். சற்றுத் தூரத்தில் அவன் குதிரை ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தது. நந்தினி பல்லக்கில் ஏறிக் கொண்டு போய் விட்டாள். சிம்மாசனத்தை இரண்டு ஆட்கள் தூக்கிச் சென்றார்கள். ரவிதாஸன் கோஷ்டியார் சிறுவனை அழைத்துக் கொண்டு விரைந்து போய் விட்டார்கள். அவர்களுடன் சென்ற தீவர்த்தியின் வெளிச்சமும் சிறிது சிறிதாக மங்கி மறைந்து விட்டது. வந்தியத்தேவனைச் சுற்றிலும் கன்னங்கரிய காரிருள் சூழ்ந்தது.

சிறிது நேரத்துக்கு முன்னால் அங்குப் பார்த்த காட்சிகள், நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் கனவோ எனத் தோன்றியது. இருட்டில் ராட்சத வௌவால்கள் படபடவென்று தங்கள் அகன்ற சிறகுகளை அடித்துக் கொண்டன. ஊமைக் கோட்டான்கள் உறுமின. நரிகள் அகோரமான குரலில் முறைவைத்து ஊளையிட்டன. ஊளையிட்டுக் கொண்டே அவை நெருங்கி வருவது போல் வந்தியத்தேவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது. காட்டில் இனந்தெரியாத உருவங்கள் பல நடமாடின.

கடம்பூர் மாளிகையில் அவன் கண்ட கனவு நினைக்கு வந்தது. ஆயிரம் நரிகள் வந்து தன்னைச் சூழ்ந்து கொண்டு பிடுங்கித் தின்னப் போவதாக எண்ணி நடுங்கினான். அவசர அவசரமாகக் கட்டுக்களை அவிழ்த்துக் கொள்ளப் பார்த்தான். இலேசில் அக்கட்டுக்கள் அவிழ்கிற விதமாகத் தெரியவில்லை.

வெளிச்சம் இருந்தால் கட்டுக்களை அவிழ்ப்பது சிறிது சுலபமாயிருக்கும். ஆனால் வெளிச்சம் என்று அறிகுறியே அங்கு இல்லை. மின்னல் வெளிச்சமும் இல்லை மின்மினி வெளிச்சங்கூட இல்லை. வானத்தில் ஒரு வேளை மேகங்கள் அகன்று நட்சத்திரங்கள் தோன்றியிருந்தாலும் அவற்றின் வெளிச்சம் அந்தக் காட்டுக்குள் நுழைய இடமில்லை.


ஆகா! அது என்ன சத்தம்? காட்டில் எத்தனையோ ஜந்துக்கள் நடமாடும் அதில் என்ன அதிசயம்? இல்லை. இது மனிதனுடைய காலடிச் சத்தம் மாதிரி இருக்கிறதே! குதிரை இலேசாகக் கனைத்தது. கால்களை மாற்றி மாற்றி வைத்து அவஸ்தைப் பட்டது. ஒரு வேளை புலி, கிலி வருகிறதா என்ன? வந்தியத்தேவன் கட்டை அவிழ்க்க அவசரப்பட்டான் பயனில்லை.

அதோ ஒரு உருவம். அந்தக் காரிருளில் ஒரு கரிய நிழல் போன்ற உருவம். மனித உருவமா? அல்லது வேறு என்னவாயிருக்க முடியும்? அது நெருங்கி நெருங்கி வந்தது. வந்தியத்தேவன் தன்னுடைய மனோதைரியம் முழுவதையும் சேகரித்துக் கொண்டான்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## நோயும் குணமும்



மாரிவளம் என்ற ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் சாத்தப்பர் என்று ஒரு வணிகர் இருந்தார். சாத்தப்பர் பரம்பரைச் செல்வந்தர். தம் பாட்டன்மார் ஈட்டிய பொருளுக்கு மேல் தம் உழைப்பால் பெரும் பொருள் ஈட்டினார். மாரி வளத்திலேயே, ஏன் அந்த வட்டத்திலேயே அவர் தான் பெரிய செல்வந்தர். அவருக்கு இருந்த நிலபுலன்களையும், கட்டடங்களையும் நகைகளையும் பிற சொத்துக்களையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால் ஐந்து கோடிக்கும் மேல் தேறும் என்று கூறுவார்கள்.

நாடெங்கும் அவரின் கீழ் பல தொழில்கள் நடைபெற்று வந்தன.

அவரிடம் முருகன் என்ற ஓர் ஏழைப் பையன் எடுபிடியாக வேலை பார்த்து வந்தான். அவனுக்குச் சாத்தப்பர் மாதம் இருபது ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தார்.

அந்த முருகன் நல்ல பையன். எனவே சாத்தப்பர் அவனைத் தொடர்ந்து வேலைக்கு வைத்துக் கொண்டார். ஒருநாள் முருகன் வேலைக்கு வரவில்லை. சாத்தப்பர் அன்று கவனிக்கவில் லை.

இரண்டாவது நாளும் அவன் வேலைக்கு வராமற் போகவே சாத்தப்பர் ஓர் ஆளை முருகன் வீட்டுக்கு அனுப்பி விடயம் என்னவென்று கேட்டு வரச் சொன்னார்.

முருகன் நோயுற்றுப் படுத்திருப்பதாக அந்த ஆள் வந்து சொன்னார். "மருத்துவரிடம் காண்பித்தானா, மருந்து வாங்கி உட்கொண்டானா?" என்றெல்லாம் சாத்தப்பர் அந்த ஆளை வினவினார். அந்த ஆள் அவ் விடயங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு வரவில்லை. பெரும்பாலான வேலைக்காரர்கள் அப்படிப்பட்டவர்கள் தானே !

சாத்தப்பர் தாமே முருகன் வீட்டுக்குச் சென்றார். பணமில்லாததால் அவன் மருத்துவரிடம் உடம்பைக் காட்டவில்லை என்று அறிந்தார். அங்கிருந்து மருத்துவர் வீட்டுக்குச் சென்றார். அவரை அழைத்துக் கொண்டு போய் முருகனைப் பார்க்கச் செய்தார் மருந்தும் கொடுக்கச் செய்தார்.

"முதலாளி, இதற்கெல்லாம் தாங்கள் அலையலாமா? ஓர் ஆளை அனுப்பினாலே போதாதா?" என்று முருகனுடைய அம்மா கேட்டாள்.

"அம்மா இது உயிரைப் பொறுத்த செயல். உள்ளத்தின் உணர்வைப் பொறுத்த செயல். இதற்கெல்லாம் வேலைக்காரர்களை விடக்கூடாது" என்று சொல்லிச் சென்றார் சாத்தப்பர்.

அவருடைய அன்பை எண்ணி அவளும் முருகனும் உருகினார்கள். முருகன் விரைவில் நலம் பெற்றான்.

கருத்துரை - பெரியோர் தம்மை அண்டியவர்கள் எவ்வளவு தாழ்ந்த நிலையில் உள்ளவர்களானாலும், தம் மதிப்பை மறந்து, அவர்கள் இருப்பிடம் சென்று, துன்பத்தை நீக்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். – *திருவள்ளுவர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தூய்மையான பொங்கலை சூரியனுக்குப் படையுங்கள்

நம் கண் கண்ட கடவுள் சூரியபகவான். நம் முன்னவர்கள் சூரியநமஸ்காரம் செய்து நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்துள்ளனர்.

ஆக, சூரியக் கடவுளை வழிபடுவது தமிழர் பண்பாடு.

தைத்திங்கள் முதலாம் நாள் சூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்கின்ற நடை முறை எம் தமிழினத்தின் நீண்ட நெடுங் கால வரலாறு.

ஆம், வேளாண் செய் விவசாயிகள் தங்கள் விளைநிலத்தில் விளைந்த புத்தரிசியில் பொங்கல் செய்து, தங்கள் தோட்டத்தில் விளைந்த முக்கனிகளையும் இளநீர் மற்றும் பசும்பால் ஆகியவற்றையும் சூரியபகவானுக்குப் படைத்து தமது நன்றியைத் தெரிவிப்பர்.

ஆக, சூரியப் பொங்கல் என்பதன் அடிப்படை அனைவரும் வேளாண் விவசாயம் செய்து தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதாகும்.

ஆம், களனிகளை உழுது நெல் விதைத்து அந்த நெல்லை அறுவடை செய்து வீட்டின் களஞ்சிய அறையில் பக்குவப்படுத்தி வைப்பதன் மூலம், அடுத்த அறுவடைக்கும் அப்பால் வீட்டில் அரிசிக்குப் பஞ்சம் இல்லை. இதனால் பசி என்ற பேச்சுக்கே இடமில்லை.

இங்கு உழுது வேளாண் செய்வதற்கு எமக்கு உறுதுணையாக இருக்கின்ற சூரியபகவானுக்கே முதலில் புத்தரிசி எடுத்துப் புதுப் பானை வைத்துப் பொங்கிப் படைக்கின்ற உயரிய பண்பாட்டை நாம் தொடர்ந்து பின்பற்றி வருகின்றோம்.

எனினும் சமகாலத்துத் தைப்பொங்கல் என்பது தன்னிலை இழந்திருப்பதைக் கண்டு கவலை கொள்ளாமல் இருக்கமுடியாது.

உண்மை. இப்போதெல்லாம் சூரியப்பொங்கல் சம்பிரதாயமாயிற்று. பச்சை அரிசி தொடக்கம் அத்தனை பழ வகைகளும் கடைகளில் வாங்கப்பட்டவை. எவையும் நம் விளைநிலத்தில் விளைந்தவை அல்ல.

அவ்வாறு விளை நிலத்தில் வேளாண் விவ சாயம் செய்வதற்கும் நாம் தயாரில்லை. இதன்காரணமாக வெந்நீரில் அவித்த விளாங்காய், மருந்து தெளித்த பழ வகைகள், செயற்கை உரங்களும் கிருமி நாசினிகளும் கொண்டு விளைவிக்கப்பட்ட அரிசி, கலப்படம் செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் என எல்லாமும் நஞ்சும் பழுதும் என்றாகிய போது,

அவற்றை ஏற்று அருந்திய சூரியபகவானும் சமநிலை இழந்து, காலம் தவறி மழையைத் தந்து, அறுவடை நேரத்தில் அவலம் செய்கின்ற அளவுக்கு வந்துவிட்டார்.

எனவே நாளைய தைப்பொங்கலின்போது நல்லவற்றை – பழுதில்லாதவற்றை – நம் வீட்டு வளவில் விளைந்தவற்றை சூரியபகவானுக்குப் படைப்போம். இதை நாம் செய்யும் போது சூரியனும் மகிழ்ந்து காலம் உணர்ந்து வேளாண் விவசாயத்துக்கு பேருதவி புரிவார். இது சத்தியம்.

## அரசாங்கம் ஊடகங்களை ஒடுக்குவதாகக் கூற அழகப்பெருமவுக்கு எந்தத் தகுதியுமில்லை

### ஊடக அமைச்சர் நலிந்த பதிலடி

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தில் இரும்புக் கரம் கொண்டு ஊடக சுதந்திரம் நசுக்கப்பட்டபோது அந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தராக இருந்த டலஸ் அழகப்பெரும ஊடக சுதந்திரம் பற்றிப் பேசுவதைக் காட்டிலும் வேடிக்கையானது வேறெதுவுமில்லை என அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடக சுதந்திரம் தொடர்பில் வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் தாமும் அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும அண்மையில் ஒரு அறிக்கையை வெளியிட்டு தற்போதைய அரசாங்கம் ஊடக அடக்குமுறையில் ஈடுபட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி முதல் 107 நாட்களில் ஊடகங்கள் குறித்து அரசாங்கம் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

டலஸ் அழகப்பெருமவின் அறிக்கைக்குப் பதிலளிக்கும் விதமாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

குறித்த அறிக்கையில் ஊடக சுதந்திரம் பற்றி டலஸ் அழகப்பெரும எழுப்பியுள்ள கவலை எந்தளவுக்கு நேர்மையானது என ஆராய வேண்டியுள்ளது.

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் ஊழல் மற்றும் மோசடிகளை வெளிக்கொணர்ந்த ஊடகவியலாளர்களுக்கு நேர்ந்த விபரீதங்களை அனைவரும் நன்கறிவர்.

டலஸ் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் அவரது தலைவர்கள் செயற்பட்ட விதம் கண்முன்னே வந்து செல்கிறது.

ஊடகவியலாளர்கள் பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பழிவாங்கப்பட்டமை மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் ஏனையவர்களை விடவும் எமக்குச் சிறந்த புரிந்துணர்வு உள்ளது.

எனவே இதுபோன்ற செயற்பாடுகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் அதே வேளை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு பின்நிற்கப் போவதில்லை எனவும் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ந-7)

## ஐ.தே.கவுடன் இணைய சஜித்தும் பச்சைக் கொடி

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி இணைந்து பயணிப்பதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் விரும்புகின்றார். ஆனால் ஒரு கட்சியை கைவிட்டு இன்னொரு கட்சியில் இணைந்து கொள்வதற்குப் பதிலாக ஒரு கூட்டணியாக எவ்வாறு ஒன்றிணைத்துப் பயணிப்பது என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவுடன் மீண்டும் இணைந்து கொள்ளுமாறு அக்கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள ஐக்கிய மக்கள் சக்திக்குப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். அவரது அழைப்புத் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டும் ஒரே கொள்கைகளையுடைய இருவேறு கட்சிகளாகும். அவ்வாறிருக்கையில் ஒரு கட்சியைப் பிறிதொரு கட்சிக்குள் புகுத்த முடியாது.

அதேபோன்று ஒரு கட்சியைக் கைவிட்டு பிறிதொரு கட்சியுடன் இணையவும் முடியாது. எனவே இரு கட்சிகளையும் பாதுகாத்துக் கொண்டு ஒரு கூட்டணியாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நிலைப்பாடாகவுள்ளது.

மாறாக இவ்விரண்டு கட்சிகளதும் இணைவை அவர் எதிர்க்கவில்லை. இணைந்து செயற்படுதல் என்ற காரணி தொடர்பில் நாம் ஆழமாக ஆராய வேண்டும்.

அதற்கமைய இரு கட்சிகளும் ஒரே கொள்கையின் கீழ் இணைந்து செயற்படுவதற்கான வழிமுறை குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதே சிறந்ததாகும். இரு கட்சிகளினதும் பிரதிநிதிகள் இணைந்து இது குறித்து எதிர்காலத்தில் கலந்துரையாடல்களை முன்னெடுப்பர்.

இணைவு எனக் கூறும் போது ஒன்றைக்கைவிட்டுப் பிறிதொன்றுக்குச் செல்வோம் என்பது பொருளல்ல. இணைந்து செயற்படுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டால், புரிதலோடு அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்க முடியும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இதில் இணக்கப்பாடு இருக்கிறது. எனினும் அதனை எவ்வாறு செயற்படுத்துவது என அவர் இன்னும் தெளிவுபடுத்தவில்லை. நாட்டிலுள்ள சகல வலதுசாரிக் கொள்கைகளையும் கொண்ட தரப்புக்களை இணைத்துக் கொண்டு பயணிப்பதையே நாம் அனைவரும் விரும்புகின்றோம்.

அது தொடர்பில் எந்தவொரு தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். எமது ஆரம்ப கட்டக் கலந்துரையாடல்களில் இது குறித்துப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. சகலரது கருத்துக்களுக்கும் முக்கியத்துவமளித்து முன்னோக்கிப் பயணிப்போம் என்றார். (ந-7)

## கறுப்புப் பட்டியலில் உள்ள நிறுவனத்திடம் அரசாங்கம் மருந்துக் கொள்வனவு

### மருத்துவர்களின் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

நோயாளிகளின் வாயைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் கிருமி நாசினி மருந்துப் போத்தல்களை இறக்குமதி செய்வதற்காக கறுப்புப் பட்டியலில் உள்ள பங்களாதேஷ் நிறுவனத்திற்கு விலைமனுக் கோரலை வழங்க அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் அனுமதி அளித்துள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இது குறித்து உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்குள் ஒரு பாரதூரமான விலைமனுக்கோரல் பரிவர்த்தனை இடம்பெற்றுள்ளது.

நோயாளிகளின் வாய்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் கிருமி நாசினிப் போத்தல்களை கொள்வனவு செய்வதற்கு அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் விலைமனுக் கோரியது.

இந்த விடயத்தில் டிசம்பர் 12 ஆம் திகதி விலைமனுக்கோரல் தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டது. மிகக் குறைந்த விலை கொண்ட நிறுவனத்திற்கு விலைமனு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விலைமனுவின் போது சம்பந்தப்பட்ட நிறுவனம் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துடன் நிதிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளக் கூடாது என்று தீர்மானம் செய்திருந்த ஒரு நிறுவனமாகும்.

இது ஒரு பங்களாதேஷ் நிறுவனமாகும். இந்த நிறுவனத்திடமிருந்து 127 மில்லியன் ரூபா மேலதிக கட்டணம் இலங்கை அரசாங்கத்தால் வசூலிக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து நாங்கள் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடம் வினவியபோது, இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து பார்க்காமல் எதையும் தெரிவிக்க முடியாது என அதன் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார் என்றார். (ந-7)

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ஹம்பாந்தோட்டை துறைமுகப் பகுதியில் பாரவூர்தி ஒன்றும் உந்துருளியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை - மிரிஜ்ஜவில முதலீட்டு வலயச் சந்திப்பில் நேற்று முன்தினம் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் உந்துருளியின் சாரதி உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி - I

10

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான எளிய முறைமை மற்றும் வாக்குப்பத்திரம்:**

வாக்குப் பத்திரமானது மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களுடைய பெயர் மற்றும் சின்னங்கள் காணப்படுகின்ற வாக்குப்பத்திரத்தில் புள்ளடியிடுதல் மாத்திரம் போதுமானது. முன்னர் மூன்று வேட்பாளர்களுக்கு வாக்குகளை அளிப்பதற்கு வாக்காளர்களுக்கு காணப்பட்ட சந்தர்ப்பம் தற்போது இல்லாது போயுள்ளது.

வாக்காளர்களுடைய முன்னுரிமைத் தெரிவிற்கான வாய்ப்பு இழக்கச்செய்யப்பட்டிருக்கின்ற வேளையிலே வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டியது அரசியல் கட்சியின் செயலாளர் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர் ஆகும். இதன்படி தேர்தலுக்கு முந்தைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற பெயர் நியமனம் தீர்மானம் மிக்கதாகக் கருதப்படும்.

**பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துதல்:**

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமானது முதற் தடவையாக உட்சேர்க்கப்பட்டுள்ளது. அது 25% ஆன அளவில் அல்லது ஒதுக்கீட்டு முறையிலாகும். இதே வேளையில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் நியமிக்கப்படவிருக்கின்ற உறுப்பினர் எண்ணிக்கையின் 1/4 பங்கு அதாவது 25% ஆன பெண் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அவ்வகையிலே இது அதிகரித்து வருகின்ற சவால்களையும், சமூக அரசியல் தேவைப்பாடுகளையும் முன்னிறுத்தி எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமாகும். அதன்படி புதிய முறையின்படி நடக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலே தெரிவு செய்யப்படக்கூடிய மிகக் குறைந்தளவான பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,900 இற்கும் அதிகமானதாகவிருக்கும்.

**மக்களுக்கு நெருக்கமான மக்கள் பிரதிநிதிகளின் தெரிவு:**

உறுப்பினர்கள் வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதால் மக்களுக்கு மிகவும் நெருக்கமான அரசியல் அலகொன்று உருவாவதற்கான சந்தர்ப்பம் அமைந்துள்ளது. அதன்படி உறுப்பினர்கள் இல்லாத வட்டாரமொன்று இராத அதேவேளை இரண்டாவது முறையும் மக்களுடைய அபிமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருப்பின் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அத்துடன், உறுப்பினர்களின் செயற்பாடுகளை மிகவும் நெருக்கமாக கண்காணிப்பதற்கான அவகாசம் வாக்காளர்களுக்குக் கிட்டியுள்ளது.

**இளைஞர் ஒதுக்கீட்டின் இழப்பு**

உள்ளூராட்சி சபை என்பது இளைய அரசியற் தலைவர்களை உருவாக்குகின்ற ஒரு விசேடமான இடமாகும். அதன்படி பழைய தேர்தல் முறைமையில் பெயர் நியமனப் பத்திரத்தில் 40% ஆன ஒதுக்கீடு இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. புதிய முறைமையில் இவ்வாய்ப்பு இழப்பிக்கச் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அதற்குப் பதிலாக உறுப்பினர் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக கொழும்பு மாநகர சபையில் முன்னர் காணப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை 53 ஆகும். இம்முறை அது 110 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முறை நிச்சயிக்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையினை கொண்ட ஒரு உள்ளூராட்சி சபை ஒன்று இல்லை. ஒரு சபையின் தேர்தல் முடிவுகள் வெளிவந்த காலத்திற்குப் பின்னரும் கூட அச்சபைக்கு மேலதிகமான உறுப்பினர்களை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ் உறுப்பினர் தெரிவு தொங்கு (மேன்மிகை உறுப்பினர்) ஆசனமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**கலப்பு முறை தேர்தலுக்கு வேட்புமனு சமர்ப்பித்தல்**

இந்த முறை தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் இரண்டு வகையான வேட்புமனு பட்டியல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

1. முதலாவது வேட்புமனுப் படிவம் - உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் வட்டாரத்துக்காக போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல்.

2. மேலதிக வேட்புமனு படிவம் - உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையின் 40% உடன் 3 பேரைச் சேர்த்து வரும் எண்ணிக்கைக்கு சமனான வேட்பாளர்களின் பட்டியல்.

முதலாவது பட்டியலில் 10% மற்றும் மேலதிக பட்டியலில் 25% பெண் வேட்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வோர் உள்ளூராட்சி அதிகார சபைக்கும் மேற் கூறிய ஒவ்வொரு பட்டியலிலும் உள்ளடங்க வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் ஆகக் குறைந்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

**உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்**

1. வட்டாரத்தின் உறுப்பினரைத் தெரிவு செய்தல்

குறித்த வட்டாரத்தின் அனைத்து வாக்குகளையும் எண்ணிய பின்னர் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சை குழுவின் வேட்பாளர் குறித்த வட்டாரத்தின் உள்ளூராட்சி அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவார். இத் தெரிவு முதலில் கம்பத்தைக் கடத்தல் முறைமையில் (FPP) ஆகும்.

2. பல உறுப்பினர் வட்டாரத்தில் (Multimember ward) உறுப்பினரைத் தெரிவு செய்தல்

குறித்த பல உறுப்பினர் வட்டாரத்தின் அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட பின்னர் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சி அல்லது சுயேட்சை குழு அவ் வட்டாரத்தில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டு அவ் அரசியல் கட்சி அல்லது சுயேட்சை குழுவில் இருந்து இருவர் / மூவர் குறித்த வட்டாரத்தின் அந்த உள்ளூராட்சி அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுவர்.

இலங்கையில் உள்ள மொத்த உள்ளூராட்சி சபைகளிலும் 4917 வட்டாரங்கள் உள்ளன. அதில் 4746 தனி உறுப்பினர் வட்டாரங்களாகவும், 167 இரு உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் 4 மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த 4917 வட்டாரங்களிலிருந்து 5092 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

அதாவது தனி உறுப்பினர் வட்டாரங்களிலிருந்து 4746 உறுப்பினர்களும், இரு உறுப்பினர்கள் வட்டாரங்களிலிருந்து 334 உறுப்பினர்களும், மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்களிலிருந்து 12 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவார்கள். மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் கொழும்பு மாநகர சபையில் மூன்றும் சம்மாந்துறை பிரதேச சபையில் ஒன்றும் காணப்படுகின்றன.

3. விகிதாசார உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்

குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின்மொத்த செல்லுபடியான வாக்குகளை அந்த உள்ளூராட்சி அதிகார சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் பிரித்து "தீர்மான எண்ணிக்கை" நிச்சயிக்கப்படும்.

- குறித்த அரசியல் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகளை அந்த மொத்த உறுப்பினர் எண்ணிக்கையினால் பிரித்து, அந்த அரசியல் கட்சிக்கு அந்த உள்ளூராட்சி அதிகாரசபையில்கிடைக்க வேண்டிய மொத்த உறுப்பினர் எண்ணிக்கை நிச்சயிக்கப்படும்.

- அந்த மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் குறித்த அரசியல் கட்சி ஏற்கனவே வட்டாரங்கள் ஊடாக தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் தொகையை கழிக்கும் போது அந்த அரசியல் கட்சிக்குரிய அந்த உள்ளூராட்சி அதிகாரசபைக்கான விகிதாசார முறையில் தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

கலப்பு விகிதாசார முறைபற்றி சில கேள்வி ப்திலகள்

1) கலப்பு விகிதாசார முறை உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் என்றால் என்ன?

ஏதேனும் ஒரு உள்ளூராட்சி அதிகார சபையில் வட்டார மட்டத்திலும், பொது ஆவணத்தின் (விகிதாசார) மூலமாகவும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் முறை கலப்பு விகிதாசார முறையாகும்.

இதன் பிரகாரம் 2017.10.12 ஆம் திகதிய 2017 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க பிரதேச சபைகள் திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் இவற்றின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவுடன்...

புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கான சீனாவின் உதவியுடன், பொருளாதார மீட்சிக்கான சீனாவின் ஆதரவு குறித்து விவாதிக்கப்படும் என்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில்சீனாவிற்கு அரசு முறைப் பயணமாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை செல்லவுள்ளார்.

இதன்போது பல்வேறு துறைகள் குறித்து அந்நாட்டு ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

மேலும் சீனப் பிரதமர் லி கியாங் மற்றும் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுத் தலைவர் ஜாவோ லெஜி ஆகியோரையும் ஜனாதிபதி அநுர குமார சந்திக்கவுள்ளார்.

மேலும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதற்குச் சீனாவின் ஆதரவை இலங்கை நாடியுள்ளது.

மீன்வளத் துறை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், மீனவர்களுக்கு வீட்டுவசதித் திட்டத்தை வழங்குவது உள்ளிட்ட சமூக நலத்திட்டங்களை உள்ளடக்கும், அதே நேரத்தில் விவசாயத் துறையில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த சீனாவின் ஆதரவைப் பெறும்.

சீன உதவியுடன் சூரிய மின்சக்தித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறை குறித்த பேச்சுவார்த்தைகள், இலவசப் பாடசாலைச் சீருடைத் துணிகளைப் பெறுவதிலும் பாடசாலைகளுக்கான ஸ்மார்ட் போர்ட் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

முதலீடுகளை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக சிச்சுவான் மாகாணத்தின் தலைநகரான செங்டுவில் உள்ள தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் வாகன அசெம்பிளி ஆலைகளை ஜனாதிபதி பார்வையிட வுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## பசிலை...

தற்போது அநுர அரசால் இரகசியமான முறையில் முன்னெடுக்கப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி பசில் ராஜபக்ஷவுடன் கடந்த காலங்களில் நெருக்கமாகச் செயற்பட்ட வர்த்தகத் துறையினர், முக்கிய அதிகாரிகள் போன்றோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

பசில் ராஜபக்ஷவின் சொத்துக்கள், சேமிப்புகள், வீடு உள்ளிட்ட சொத்துக்கள் குறித்துப் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாகத் தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் சர்வதேச பிடியாணை பெறக்கூடிய வகையில் மிக விரைவில் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுப்பதற்கான ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் சட்ட மா அதிபருடனான சந்திப்பின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்த விடயம் குறித்து முக்கியமாகக் கேட்டறிந்து கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## தமிழக மீனவர்...

8 பேரை கடற்படையினர் கைது செய்ததோடு அவர்கள் பயன்படுத்திய இருவிசைப் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இரண்டு படகுகளில் கடலுக்குச் சென்ற 8 மீனவர்களே வடக்கு மன்னார் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 8 மீனவர்களும் விசாரணைகளின் பின்னர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

கடந்த 2024ஆம் ஆண்டு 72 படகுகள் சிறைபிடிக்கப்பட்டு 554 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அரிசி இறக்கு...

கொள்ளப்பட மாட்டாது என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு அரிசி இறக்குமதி செய்வது தொடர்பான சுற்றறிக்கை மேலும் நீடிக்கப்படாது.

அரிசி இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட காலம் கடந்த 10ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்துவிட்டது.

அதன்படி, இறக்குமதி செய்யப்பட்டு சுங்கம் மூலம் விடுவிக்கப்பட்ட மொத்த அரிசியின் அளவு 167,000 மெற்றிக் தொன்களைக் கடந்துள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 66,000 தொன் பச்சை அரிசி மற்றும் 101,000 தொன் புழுங்கல் அரிசி ஆகியவை அடங்கும்.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 8,000 மெற்றிக்தொன் அரிசி இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பதாகவும் சுங்கத்துறை தெரிவித்துள்ளது என்றார். (ந-7)

## இந்து சமுத்திர...

தாபனத்தின் தலைவர் ஜனக ராஜ கருணா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள எண்ணெய் சேமிப்புத் தொட்டிகளை மேம்படுத்துதல் மற்றும் திருகோணமலையில் புதிய எண்ணெய் சேமிப்பு தொட்டிகளை நிர்மாணித்தல் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

"இலங்கையின் புவியியல் இருப்பிடம் மற்றும் திருகோணமலை துறைமுகத்தின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு, பெற்றோலியப் பொருட்களை சுத்திகரித்து ஏற்றுமதி செய்வதற்கான பிராந்திய மையமாக இலங்கை மாற முடியும்" என்று ராஜகருணா தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியுடன் திருகோணமலை எண்ணெய் சேமிப்புத் தொட்டிகள் அமைந்துள்ள தளத்தைக் குறித்த நாடுகளின் தூதுவர்கள்நேற்று நேரில் ஆய்வு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கச்சான்...

சிக்கியமையால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு ஒன்றரை வயதுப் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

சுன்னாகம் ஐயனார் வீதியைச் சேர்ந்த சசிதரன் டனியா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை நேற்று முன்தினம் இரவு கச்சான் சாப்பிட்டுவிட்டு உறங்கியுள்ளது.

இதனையடுத்து குழந்தை தொடர்ச்சியாக வாந்தியெடுத்தபோது பெற்றோர் அவரைத் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

ஆயினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை குழந்தை உயிரிழந்துள்ளது.

மரண விசாரணைகளை யாழ்மாவட்ட மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் சுவாசக் குழாயினுள் கச்சான் பருப்பு சிக்குண்டுடதால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2025.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 5714
P 0 8 9 7 0 2
அத சம்பத P 9 7 0 2
சீட்டிழுப்பு இலக்கம் 289

தன நிதானய
திகதி - 2025.01.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1744
K 22 47 63 75 K
Double Chance 14926

மெகா பவர்
திகதி 12/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2062
D 23 11 16 19 38

லக்கி 7 VIP
திகதி 2025.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 540
T 6 3 4 8 3 8 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3956
சீட்டிழுப்பு திகதி 12.01.2025
R 12 25 26 63
R

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 1023
விருச்சிகம் 10 11 18 46 விருச்சிகம்
71627 19

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.01.2025 வெற்றி வாரம் 422
V 0 7 3 0 5 4
94872
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,015,042.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2688
சீட்டிழுப்பு திகதி 2025.01.12 தினம் ஞாயிற்றுக்கிழமை
11 41 43 49 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,552,085.60

சனிதா
திகதி 12.01.2025 வெற்றி வாரம் 4849
21 48 52 63 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,680,567.60
82696

சசிரி
வெற்றி வாரம் 599
சீட்டிழுப்பு திகதி 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை
14 25 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4400
சீட்டிழுப்பு திகதி 12.01.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
09 15 42 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,942,651.60
179477

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 19 24 57 65 69
1864
12.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,682,187.20

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2514
சீட்டிழுப்பு திகதி: 2025.01.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,259,792.80
அத கோடிபதி ADA KOTIPATHI
10 33 65 68 F
263941

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி கடத்தல் வான்சாரதி கைது

கண்டி, தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மாணவி ஒருவர் வானில் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வான் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து, அதன் சாரதி நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தவுலகலப் பொலிஸ் பிரிவில் மாணவி ஒருவரை வானில் வந்த சிலர் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பான சிசிடிவி பதிவுக் காட்சி சமூக வலைத்தளங்களில் பரவி வரும் நிலையில், இது தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில் தவுலகலப் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கைதான வான் சாரதி கஹடபிட்டிய, கம்பளை பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் ஆவார்.

கடத்தப்பட்ட மாணவியைக் கண்டுபிடித்து ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்ய 3 பொலிஸ் குழுக்கள் தற்போது விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(ந)

## தென்னை...

மேற்பரப்பு ஈக்களின் எச்சங்களால் கறுப்பாகியுள்ளதுடன் ஓலையின் கீழ்ப் பகுதியில் வெள்ளை நிறப் பூஞ்சனங்கள் பற்றிப் பிடித்துள்ளன.

கடந்த வருட நடுப்பகுதியில் தென்னைகளில் ஏற்பட்ட வெள்ளை ஈ தாக்கத்தால் வட மாகாணத்திலுள்ள தென்னை மரங்கள் பெரும் பாதிப்படைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.(ந-7)


**Thirunelvely Kids' Park Elocution Centre**
**New Admission for kids**
2025 புதுவருடத்தை முன்னிட்டு தங்கள் பெறுமதிமிக்க பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்கான ஆங்கில உச்சரிப்பிற்கான உறுதியான அடித்தளம் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரை சிறந்த பயிற்சியை பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம்.
வயது 4 முதல் பிரிவு ஒன்று
வயது 6 முதல் பிரிவு இரண்டு
வயது 8 முதல் பிரிவு மூன்று
வயது 10 முதல் பிரிவு நான்கு
AEI L O
(3017)
தொடர்புகளிற்கு: இல. 528, பலாலி வீதி, திருநெல்வேலி. 071 308 0330

**நம்பினால் நம்புங்கள்**
அதிசயம் ஆனால் உண்மை. உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
**காயத்திரி திருமண சேவை**
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
(2977)
076 314 4689
077 844 9861, 076 008 6961

**Tharany SUPERMARKET**
எமது மாணவச் செல்வங்களுக்காக தாரணி சூப்பர்மார்க்கெட்டின் அதிரடி சலுகை

5 கட்டு கொப்பிகள்
2 வாங்கினால்,
அதே 5 கட்டு கொப்பிகள்
2 இலவசம்
Free
இச்சலுகை
2025/01/15
அன்று மட்டுமே..
No 758, KKS Road, Jaffna, Sri Lanka
077 1997 206
நிபந்தனைக்குட்பட்டது
(C-2024)

**X MARD** EVERYWHERE FOR YOU
யாழ்.கோப்பாயில் பிரம்மாண்டமான சூப்பர் மார்க்கெட்
**திறப்பு விழா**
ஜனவரி | 13 | 2025
திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு
MANIPAY ROAD, KOPAY NORTH, KOPAY
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
X MARD திறப்பு விழாவை முன்னிட்டு விசேட தள்ளுபடி

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~695~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மேலும் பல பொருட்கள்..
விசேட விலைக்கழிவுடன். சலுகை விலையில் பெற்றுக் கொள்ளலாம்
0742327545 MANIPAY ROAD, KOPAY NORTH, KOPAY
(C-2024)

**STUDY IN UK**
CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND

**IELTS**
இம்மாதம் முழுவதும் நிபந்தனைகள் எதுவும் இல்லா 100% இலவச
விசா ஆலோசனைகள் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் வழங்கப்படும்
**WEC COLLEGE**
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
மற்றும் கிளை : சாவகச்சேரி
(2986)
0779265447/ 0217200989

**விசாக்கான (Show money)**
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
•Visit visa
•Student visa
•Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
(531)
075 033 6759

**The Academy of English for Language & Literature**
"Learning Language through feelings"
English Language Grade 6 - 11
English Literature for Grade 10 & 11
Spoken English for those who sat A/L Examination in 2024
Coaching and Guidance for IELTS
T.P : 0777 880 330
Nellilady & Thirunelvely
By Professionally Qualified Teachers & Lecturers
(3017)

**வேலைக்கு ஆள் தேவை**
சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் கதைக்கப்படும்.
(C-2027)
077 073 5931

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2026)

புதியபிரிவுகள் ஆரம்பம்
18/01/2025
தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
**aat** [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
(Medium – Tamil & English)
கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business level I,II
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium – Tamil &English)
வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
DBF & HDBF
Qualification:- G.C.E. A/L 3 Passes
( Medium – Tamil & English)
G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
**Certificate Course in English**
Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0774405917
(C-2025)

**Happy Supermarket** - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 228/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= |
| 1Kg தீட்டல் பச்சை | - 255/= |
| 1Kg சர்க்கரை | - 265/= |
| 1Kg பயறு | - 560/= |
| 1Kg கடலை | - 490/= |
| 1Kg பொன்னி | - 237/= |
| 1Kg சிவப்பு கௌபி | - 660/= |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 125/= ~~150/=~~ |
| 01 டசின் கற்பூரம் | - 290/= ~~370/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= ~~240/=~~ |

பொங்கல் பானை விசேட விலைகள்


| Size/ No | விலை |
|---|---|
| 08 | 400/= |
| 12 | 630/= |
| 14 | 780/= |
| 16 | 890/= |
| 18 | 980/= |

பொங்கலுக்கு தேவையான பொருட்களை விசேட விலைகளில் எம்மிடம் கொள்வனவு செய்யலாம்.
Facebook:- happy basket.lk
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
(542)
Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெற் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org